ஆவியின் பட்டயம்



ஆர்.டி. ஆர்ச்சிபால்ட்

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

About Word of God Ministries

Word of God Ministries was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

ஆவியின் பட்டயம்

0/75

IMMANUEL GOSPEL LIBRARY
9th Main Road
Mariyappana Palya
4th Cross, Magadi Road
BANGALORE - 560 023

எழுதியவர் :

ஆர். டி. ஆர்ச்சிபால்ட், M.A.

IMMANUEL GOSPEL LIBRARY
BOOK No.
117
C
BANGALORE-23

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்
158, புரசவாக்கம் ஹை ரோடு,
சென்னை-7

First Edition ... 1938
Second Edition ... 1962

With grateful acknowledgement to the C.S.S.M.
for permission given to reprint this book.

ஆவியின் பட்டயம்
பரம இராஜாவின்
போர் வீரருக்கு

(The Spirit's Sword for Soldiers of the King)

ஆர். டி. ஆர்ச்சிபால்ட் M.A.

முகவுரை

கீழ்வரும் விஷயங்களும் வசனங்களும் **ஆவியின் பட்டயத்தை** வெகு திறமையோடு உபயோகிக்க விரும்புகிறவர்களுக்கு உதவியாயிருக்கவேண்டுமென்றே எழுதியிருக்கின்றன.

வாள் போரில், தற்காப்பு முறைகளையும், முன் குத்து, பின் குத்து, பக்கவெட்டு முதலிய கத்திப் பிரயோகங்களையும், முன் கட்டு, பின் கட்டு, பக்கக்கட்டு, தலைக்கட்டு முதலிய வீச்சுக்களையும், அடி பெயர்த்தல், பதி போடுதல் முதலியவற்றையும் நீ அறிய விரும்புகிறாயா? சாத்தான் உன்னை எதிர்த்தாலும், உன் சகோதரர்களை அடிமைத்தனத்திற்குக் கொண்டு போகிறதை நீ காண நேரிட்டாலும், அவனை அஞ்சாமல் எதிர்த்து நின்று போராடி ஜெயம்பெற விரும்புகிறாயா?

இந்நோக்கத்தோடு தான் ஆவியானவருக்கே சொந்தமான பட்டயத்தை (எபேசியர் 6: 17) உன் கையில் கொடுத்திருக்கிறது. அதை எப்படிக் கையாடவேண்டுமென்று உனக்குக் கற்றுக் கொடுக்கவேண்டிய ஆசிரியர் **ஆவியானவரே**. பழக்கத்தால் தேர்ச்சி உண்டாகும். உறையிலே உன் பட்டயத்தை வைத்திருந்தால் அது துருப்பிடித்து விடும். அதை உருவித் தினந்

தோறும் வீசப்பழகு! இதுவே வெற்றி வீரர் சேனையில் முன்னேறிச் செல்வதற்கேற்ற வழி.

இதில் காணப்படுகிற பாட ஒழுங்குகளை முதலில் தென் இந்தியாவிலுள்ள தமிழ் கிறிஸ்தவச் சிறுவர்களின் பிரயோஜனத்திற்காக நான் எழுதினேன். ஆனால், பின்பு பார்வையிட்டுப் பலவாறு சீர்ப்படுத்தியிருக்கிறேன்.

மாதத்திற்கொரு புதிய விஷயமாக ஒரு வருஷத்தில் முடிக்குமாறு பன்னிரண்டு விஷயங்களை விவரித்திருக்கிறேன். ஒரு வேளை, உங்களுக்கு இதைவிட அதிக நாளாகலாம். ஆயினும், அவசரப்படவேண்டாம். அநேக விஷயங்களில் பல சிந்தனைகள் உண்டு. அவைகளை உன் ஜீவியத்தில் அநுபவத்திலே கொண்டுவரவும் அதிகக் காலமாகும். மூளையினால் அறிகிறதைவிட இருதயத்திலே அறிகிறதுதான் சிறந்தது. இங்கே கொடுத்திருக்கிற விஷயங்களை எந்த முறைப்படி வேண்மானாலும் ஆராயலாம். என்றாலும், நான் கொடுக்கிற முறை ஒழுங்கில் ஒரு நோக்கமுண்டு.

ஆரம்பத்திலிருந்தே வேத புஸ்தகத்தில் வசனங்களைக் குறிப்பது நல்லது. அது அலங்கோலமானாலும் பரவாயில்லை. வசனங்களைக் குறிக்குமட்டும் வேதத்தை நன்றாய் அறியமுடியாது. உனக்கு முக்கியமாகத் தோன்றுகிற வார்த்தைகளின் கீழே கோடிட்டாவது, அவைகளின் மேல் கூரிய பேனாவால் மையிட்டு வரைந்தாவது, பக்கந்தோறும் எடுத்து நின்று தெரியும்

படிச் செய்யவேண்டும். ஒரு வசனத்திற்கெதிரில் அம்பு <——அடையாளமிட்டால் அது நம்மைக் கவனிக்கச் செய்யும். கூரான பேனாவெடுத்துக் கூடியமட்டும் நேர்த்தியாய்ச் செய்யுங்கள். நன்றாய் குறித்த வேதம் என்றும் நித்திய பொக்கிஷம்.

குறிப்புக்கள்

(1) வாரந்தோறும் ஒரு வசனத்தை, அது இருக்கும் இடத்தோடு மனப்பாடம் பண்ணு. இதுவே இச்சிறு புஸ்தகத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. வசனங்களையும், அவை வரும் இடங்களையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் ஒரு வாரத்திற்கு ஒரு வசனம் போதும். இதற்காக ஒவ்வொரு மாதத்திற்கும் மூன்று வசனங்களைத் தெரிந்தெடுத்து அவைகளைத் தடித்த எழுத்தில் அச்சிட்டிருக்கிறது. நாலாவது வசனத்தை நீயே தெரிந்து கொள்.

(2) வசனத்திற்குப்பின் (a) போட்டிருப்பதானது அவ்வசனத்தின் முன் பாதியை மாத்திரம் வாசிக்கவேண்டுமென்று காட்டுகிறது. அப்படியே (b) போட்டிருப்பது பின்பாதியைக் காட்டுகிறது.

பொருள் அட்டவணை

1. பாவமும் நியாயத் தீர்ப்பும்
2. இயேசுக் கிறிஸ்துவே இரட்சகர்
3. மன்னிப்பு
4. நிச்சயம்
5. பரிசுத்த ஆவியானவர்
6. பரிசுத்த இலட்சணம்
7. சோதனை
8. ஜெயத்தின் இரகசியங்கள்
9. வேத ஆராய்ச்சி
10. ஜெபம்
11. சாட்சி
12. ஊழியமும் பாடுகளும்

மரண வழி

I

பாவம், நியாயத் தீர்ப்பு

பாவமென்றால் என்ன ?

1 யோ. 3: 4.	*மாற்கு 7: 21, 22.*
1 யோ. 5: 17a.	*ரோ. 3: 23.*
யாக். 4: 17.	*ரோ. 14: 23.*
நீதி. 24: 9.	*சங். 51: 4a.*

செய்யத்தகாதவைகளைச் செய்கிறது பாவம்; செய்யவேண்டியவைகளைச் செய்யாமல் விடுகிறதும் பாவம். மேலே குறித்த வசனங்களில் எவை இதைச் சொல்லுகின்றன? மத். 23-ஐ ஒப்பிட்டுப் பார். பாவம் என்று திருப்பியிருக்கும் வார்த்தை எபிரேய பாஷையிலும் கிரேக்க பாஷையிலும் ''குறிப்புத் தவறுகிறது'' அல்லது, 'தவறுதல்' என்ற அர்த்தம் கொள்ளுகிறது. கடமையைச் செய்வதிலும், சீஷத்தன்மையிலும் தவறுதல் மிகவும் சாதாரணமான பாவமாம். பாமென்றாலும் தவறு என்றாலும் இரண்டும் சரியே. மத். 25-ம் அதி. வாசித்து, அதில் ஒவ்வொரு உதாரணத்திலும், செய்யவேண்டியவைகளைச் செய்யாமலிருப்பதற்காகவே கடிந்து கொள்ளப்பட்டிருத்தலைக் கவனி. கன்னிகைகள் எண்ணெய் கொண்டு போகவில்லை. ஒரு தாலந்துள்ள மனிதன் அதை புதைத்து வைத்தான். அநேகர் தரித்திரரைச்

சந்தித்து அவர்களுக்கு உதவி புரியத் தவறியிருக்கிறார்கள். யாக். 2: 10-ஐ எடுத்துப் பார்

பெரிய பாவம் எது?

மத். 22: 36-38 பார்க்கவும்.

மாற்கு 12: 28-30 ஓடு

உபா. 6: 5-ஐ ஒப்பிட்டுப் பார்.

முதன்மையான பெரிய கற்பனைகள் அடங்கியிருக்கிற இந்த வசனங்களில் குறிப்பிட்ட கடமையின் அளவுக்குக் குறைவாய்க் காணப்படுவதே பெரிய பாவமல்லவா? அல்லது யோ. 13: 34-ல் சொல்லியிருக்கும் புதிதான கற்பனையினால் உன் ஜீவியத்தைச் சோதித்துப் பார்.

பாவத்தின் விரிவு:

ஏசா. 53: 6a ஆதி. 8: 21
ஏசா. 64: 6. ரோ. 3: 10-19.
ஆதி. 6: 5, 6. கலா. 3: 22.
ரோ. 3: 23.

நீ உன்னுடைய பாவத்திற்கு உத்திரவாதியா?

எசே. 18: 2-4, 20; ரோ. 14: 12.

எல்லாரும் பாவஞ்செய்து குற்றவாளிகளாயிருக்கிறோம் :

ஆகையால்

எல்லாரும் ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளானோம்.

ரோ. 5 : 12, 18.
எபி. 9 : 27 ஓடு
வெளி. 20: 11, 12-ஐ ஒப்பிட்டுப்பார்.

பாவம் என்ன செய்கிறது?

ஏசா. 59 : 1, 2. மாற்கு 7 : 23.
சங். 66 : 18. 1 கொ. 15 : 56.
எரே. 17 : 9 ரோ. 6 : 23a.
எண். 32 : 23. யாக். 1 : 15.

பாவமானது உள்ளத்தின் சீர்கேட்டையும் தேவனிடத்திலிருந்து பிரிந்து போகிறதையும், மரணத்தையும் குறிக்கிறது.

கேள்விகள் :—

1. கிறிஸ்து, பாவம் என்ன என்று சொல்லும்போது, அதின் எந்தத் தன்மையை விசேஷித்துக் கூறுகிறார்?

2. இங்கே திரட்டிச் சொல்லியிருக்கிற பாவத்தின் பலன் உன் ஜீவியத்திலும் உன்னைச் சுற்றியிருக்கிற உலகத்திலும் நீ கவனித்திருக்கிறதோடு ஒத்திருக்கிறதா?

வழி பிரிதல்

II

இயேசுக் கிறிஸ்து ஒரே இரட்சகர்

எல்லா மனிதருக்கும் :

யோவான் *12 : 32.* அப். *10 : 42, 43*
யோவான் *14 : 6* *1* யோ. *2 : 2.*
1 கொரி. *3 : 11.* *1* யோ. *4 : 14*
1 தீமோ *2 : 5, 6.* ரோ. *6 : 23b.*
அப். *4 : 12.* *1* யோ. *5 : 11, 12.*

யூதா *25* என்பவைகளோடு

ஆதி. *12 : 3; 22 : 18;* சங். *72;* ஏசா. *42 : 8; 43 : 11; 45 : 21-23;* அப். *17 : 30, 31;* வெளி. *5 : 3-5, 9, 12, 13* ஒப்பிட்டுப்பார்.

"யேகோவா இரட்சகர்" என்று அர்த்தங் கொள்ளும் யேகோஷவா (யோசுவா) என்ற பதத்தைக் கிரேக்க பாஷையில் இயேசு என்று எழுதியிருக்கிறது. இயேசு தேவனும் மனுஷனுமாயிருக்கிறார் என்று ரூபிக்கிறதற்கு மேலே குறிக்கப்பட்ட வாக்கியங்களில் எது மிகவும் சிறந்தது?

கிறிஸ்து யாருக்காக வந்தார் :

மத். *9 : 13b.* லூக். *19 : 10*
1 தீமோ. *1 : 15.* ரோ. *5 : 6, 8.*

லூக்கா 15-ம் அதிகாரம் முழுவதையும் வாசித்து "காணமற்போன" என்கிற வார்த்தையை, அது வருகிற இடத்திலெல்லாம் குறிப்பிடு. மற்றத் தீர்க்கதரிசிகளும், போதகர்களும் தோன்றியிருக்கிறார்கள். அவர்களுடைய வார்த்தைஉண்மையாய் இருந்திருக்கலாம். அவர்கள் ஜீவியமும் பரிசுத்தமாயிருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் இழந்துபோன உலகத்தை இரட்சிக்க முடியவில்லை.

கிறிஸ்து என்ன நோக்கத்தோடு வந்தார்?

மத். 1 : 21	2 கொரி. 5 : 18, 19.
மாற்கு 10 : 45.	2 கொரி. 5 : 15, 21.
யோவான். 1 : 29	கொலோ. 1 : 19-22.
அப். 3 : 26.	1 பே. 2 : 24.
எபி. 9 : 26b	ரோ. 5 : 17, 19, 21.
1 யோ. 4 : 10.	யோவான் 3 : 16, 17.
எபி. 2 : 9, 10.	யோவான் 5 : 40.
1 பே. 3 : 18a	யோவான் 10 : 10.
எபி. 2 : 14, 15.	மத். 11 : 28.
1 யோ. 3 : 8b	யோவான் 7 : 37.

லூக்கா. 4 : 18, 19.

அபிஷேகம் பண்ணப்பட்டவர் வழிகளைப் பிரிகிற இடத்தில்நின்று, நீ மரணத்திற்குச் செல்லும் வழியை விட்டுத் திரும்பித் தமது உயிரைத்கொடுத்து உனக்காகத் திறந்து வைத்திருக்கிற "புதிய ஜீவ வழியில்" பிரவேசிக்கப் வேண்டும் என்று ஆவலோடு எதிர் பார்க்கிறார்.

யோவான் 3 : 17, 18, 19, 36-ல் உள்ள பயபக்தியான வார்த்தைகளை நிதானமாகச் சிந்தித்துப் பார்.

கேள்விகள் :—

1. மேலே குறித்திருக்கும் வாக்கியங்களின்படி "இரட்சிப்பு" என்றால் அர்த்தமென்ன?

2. நீ எந்தெந்தப் பாவங்களிலிருந்து இரட்சிப்படைய வேண்டும்?

குறிப்பு :—இந்த மாதத்திற்கென்று 6 வசனங்கள் தடித்த எழுத்தில் கொடுத்திருக்கின்றன. அவை மிகவும் முக்கியமானவை.

———

ஜீவ வழி

III

மன்னிப்பு

பாவம் நீக்கப்பட்டது :

ஏசா. 53:5, 6. *யோவான் 1 : 29.*
1 பே. 2 : 24. *கொலோ. 2 : 14.*
எபே. 1:7.

உன் பாவமன்னிப்பை வாங்குகிறதற்கு இரட்சகர் என்ன விலைகொடுக்க வேண்டிய தாயிருந்தது என்பதை இது காட்டுகிறது. "அவர் மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவரானுர்".

பாவி மன்னிப்படைந்தான் :

ஏசா. 1 : 18 *ஏசா. 38 : 17*
ஏசா. 43 : 25 *மாற்கு 2 : 5, 10.*
ஏசா. 44 : 22. *லூக். 7 : 41—50*
சங். 103 : 12. *2 கொரி. 5 : 19.*
மீகா 7 : 18, 19. *1 யோ. 2 : 12.*

இவ் வாக்கியங்கள் "மன்னிப்பு" என்ருல் என்ன என்று சொல்லுகிறது. பிதாவின் வாக்குத்தத்தமும், இரட்சகருடைய நாமமுமே உனக்குச் சார்பாயிருந்து வழக்காடுபவை.

அப்படியானுல் குற்றவாளியான பாவி இம் மன்னிப்பை பெற்றுக்கொள்ளும்படி என்ன செய்யவேண்டும்?

பாவி தன் பங்காகச் செய்யவேண்டியது:

1 யோ. 1 : 9.
ஏசா. 55 : 7.
நீதி 28 : 13.
சங். 51 : 17.
அப். 2 : 38.
மத். 6 : 14, 15.
யோவான் 1 : 12.
யோவான் 3: 16, 18.
அப். 10 : 43.
அப். 16 : 31.
யோ. 6 : 37

கேள்விகள் :—

1. மூன்று பிரிவுகளிலும் கொடுத்திருக்கிற வசனங்களின் கருத்தைத் திரட்டிப்பார்த்த பின்பு பாவ மன்னிப்பின் நிபந்தனை என்ன என்று தெளிவாய் எழுது. பிறகு அப். 20 : 21 எடுத்துப்பார்.

2. 'மனந் திரும்புதல்' என்னும் பதத்தின் கருத்து என்ன? சும்மா வாயினாலே பாவங்களை யெல்லாம் சொல்லுவது என்று அர்த்தமா? அல்லது பாவத்துக்காகத் துக்கித்தல் என்று அர்த்தமா? 2 கொரி. 7 : 9, 10.

தேவனுடைய வழியையும், தேவனுடைய எண்ணங்களையும் பிடித்துக்கொள்ளும் பொருட்டு, உன்னுடைய சொந்த வழியையும் உன்னுடைய சொந்த யோசனைகளையும் விட்டு விடுகிறதுதான் மனந்திரும்புதல், ஏசா. 55 : 7. ஜீவனுக் கேற்ற மனந்திரும்புதலாவது, சிலுவை வழியாய்ப் பரம பிதாவினிடத்தில் திரும்பச் சேர்தலேயாம்.

இதுவும் தேவனுடைய ஈவே. அப். 5 : 31; 11 : 18.

3. நீ எப்போதாவது மெய்யாய் மனந் திரும்பியிருக்கிறாயா?

புதிய ஆரம்பங்களோடு கூடியதே கிறிஸ்தவ ஜீவியமாகும்.

இது உண்மையானால் ஒவ்வொரு புதுத் துவக்கத்தில் நீ செல்லும் பாதையில், முன்னிருந்த நிலையிலும் அதிகமாய் முன்னேறிச் சென்றிருக்கவேண்டும்.

———

IV

நிச்சயம்

நிச்சயத்திற்கு ஆதாரம் :

அப். 13 : 38, 39.	கொலோ 1 : 19-21
ரோம. 4 : 25.	எபே. 2 : 13.
2 கொரி. 5 : 18, 19.	1 தீமோ. 2 : 5, 6.

1 யோ. 4 : 10.

எபி. 9 : 11—10 : 22 வாசி. விசேஷமாய் 10 : 22-ஐ கவனி.

தேவன் அன்பாயிருக்கிறார். ஆனால் அவர் பரிசுத்த அன்பாயிருக்கிறார்; அது தான் பாவத்தின் அகோரத்தைக் காண்பித்து, பாவ நிவாரண அவசியத்தைத் தெளிவாக்குகிறது.

பாவ நிவாரணத்தில் தேவன் திடமான நிச்சயத்திற்கு நிலையான ஆதாரம் கொடுத்திருக்கிறார். ஏனென்றால் அவரே தமது குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவில் அம்முறையை வகுத்து ஏற்படுத்தி வைத்தார்.

*உயிர்த்தெழுந்ததும், பரலோகத்திற்கு ஏறினதும், ஒப்புரவாக்குதல் பூரணமான

*குறிப்பு:—எப்பொழுதாவது கிறிஸ்து தம்முடைய உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசாமல் மரணத்தைப் பற்றிப் பேசியிருக்கிறாரா?

தென்று ரூபித்தன. கிறிஸ்துவின் "முடிந்தது" என்ற வார்த்தைக்கு, பிதா 'ஆமென்' என்று சொல்லுவதாலே, ஒப்புரவாக்குதல் பூரணப்பட்டதாகும்.

2 கொரி. 5 : 18, 19-ல் தேவனுடைய சிந்தனையைப் பூரணமாய்க் காட்டியிருக்கிறது. ஒப்புரவாக்குதல் முழுவதும் அவருடைய சொந்தச் செய்கையே. இப்பொழுது அது மனுஷ ஜாதிக்கு ஒரு முடிவுபெற்ற சத்தியமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு தடவை சிலுவையில் அறையப்பட்டு இப்பொழுது உயிரோடிருக்கிற அவரில் நீ விடுதலையானதினால் நீதிமானாக்கப்பட்டவனாய்ப் பிதாவின் முன் நிற்கிறாய். ஏனென்றால் அவர் தம்முடைய குமாரன் மூலமாய் உன்னைப் பார்க்கிறார். குமாரனுடைய பரிசுத்தம் உன் பட்சத்திலிருக்கிறது. இந்த மகிமையான சத்தியந்தான், தேவன் உன்னை ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பதைப்போல் ஏற்படுகிற சந்தேகங்களையெல்லாம் அப்புறப்படுத்தவேண்டும். ஒரு கிறிஸ்தவன் தன்னைக் கிறிஸ்துவில் இருக்கிற

இவ்விரு செய்கைகளும் அவருடைய பார்வையில் ஒன்றிற்கொன்று பிரிக்கமுடியாதபடி சம்பந்தப்பட்டவைகளாயிருந்தன; ஏனென்றால், தேவனுடைய மீட்பின்நோக்கம் தம்முடையகையிலேயே நிறைவேற வேண்டுமென்பதை அவர் அறிந்திருந்தார். ஏசா. 52 : 13; 53 : 10 பார்க்கவும்.

வனுக பார்க்கும்படி எத்தனை முறை நிருபங்கள் போதிக்கிறதென்று கவனி. உதாரணமாக எபே. 1 : 3—11; பிலிப். 3 : 9; ரோமர் 8 : 1. இதுதான் இரட்சிக்கப்பட்ட பாவியின் **புது நிலைமை.**

நிச்சயத்தை அடையும் வழி :

எபே. 2 : 8, 9.	கலா. 2 : 16.
ரோ. 3 : 21—28	கலா. 2 : 26.
ரோ. 4 : 3—8	தீத்து 3 : 5
ரோ. 4 : 23—25	யோவான் 3 : 6
ரோ. 9 : 30—33	யோவான் 5 : 24.
சங். 34 : 22.	யோவான் 6 : 40, 47
ரோ. 5 : 1, 2.	1 யோவான் 2 : 12.

அவர் தம்முடைய நாமத்தினிமித்தம் உன் பாவங்களை உனக்கு மன்னித்திருக்கிறூர். உன்னுடைய சொந்தப் புண்ணியம், அல்லது கிரியையினிமித்தமன்று; கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகத்திற்காகத் தமது ஜீவனைக் கொடுத்ததினுல் நீ இரட்சிப்பு அடைகிறுய். நித்திய ஜீவன் அவருடைய குமாரனுல் உனக்குக் கிடைக்கும் தேவ ஈவு. அதை உன்னுடைய கிரியையினுல் சம்பாதிக்கவும் முடியாது. அது உனக்கிருக்கிறதா என்று உணரப் பிரயாசப்படுகிறதினுல் அதை அடையவும் முடியாது.

*யோவான் 14 : 6-ல் நித்திய ஜீவன் என்றுல் என்னவென்று வரையறைசெய்து காட்டியிருக்கிறது. அதோடு இந்த வசனங்களையும் பார்க்கவும் : யோவான் 17 : 3; 1 யோவான் 1 : 2; 5 : 20; அது பிதாவோடும் குமாரனேடுமுள்ள ஐக்கியம்; அது கிறிஸ்து; அதுவே பரிசுத்தாவியானவர். அவர் ஆத்துமாவுக்குக் கொண்டு வருவதும் அதுவே.

1 யோ. 5 : 9—13 வாசித்துத் தேவன் எழுதி வைத்திருக்கிறதை நம்பு.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரித்ததனுலும் அவ்வாறு தேவன் தாமே கூறுவதினுலுமே என் பாவங்களுக்கெல்லாம் உண்மையாகவே மன்னிப் படைகிறேன் என்று யதார்த்தமாக விசுவாசிக்கு மட்டும், நீ பாவ மன்னிப்பினுல் உண்டாகும் சந்தோஷத்தை அனுபவிக்கவே முடியாது.

அவர் முடித்திருக்கிற வேலையும் அவருடைய நிச்சயமான சாக்ஷியும், எக்காலத்திற்கும் போதுமான பிணைகளாம். தேவன் உனக்காகச் செய்து முடித்திருக்கிற கிரியைகளுக்கும் அவருடைய வார்த்தைகளுக்கும் ஈடாக உனக்குள்ள

---

*நித்திய ஜீவனும் அதில் அடங்கியிருக்கிற யாவும் உனக்குச் சொந்தமானவை. இது தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தால் நம்பி ஏற்றுக்கொள்ளவேண்டிய ஒரு சத்தியம்.

யாவற்றையும் வைக்கலாம். அப்படி செய்வதினால் நீ அவரை மகிமைப்படுத்துகிறாய், சங். 119:89; ஏசா. 40:8; மாற்கு 13:31.

நிச்சயத்தைப்பற்றிய அறிவு.

ரோ. 5:11. 2 தீமோ. 1:12.
1 பே. 1:8. 1 யோ. 5:20.
ரோ. 8:16.

யோவான் 10:27—29லும் ரோ. 8:31—39 லுமிருந்து உனக்கு மிகவும் உறுதியான நிச்சயம் கிடைக்கும்.

விசுவாசம் சத்தியத்தின் பேரில் நிலை நிற்கிற வண்ணமே உணர்ச்சியும் விசுவாசத்தின்மேல் நிலைகொண்டிருக்கிறது. ஆனால் உணர்ச்சி விசுவாசத்திற்கு முந்தக்கூடாது. உன் விசுவாசத்தின் அளவின்படி உனக்குச் சந்தோஷமும் சமாதானமுமுண்டாகும். ஒரு சாதாரண விசுவாசியினுடைய அநுபவம் ரோமர் 15: 13-ல் சொல்லியிருக்கிறதற்கு இசைந்திருக்கவேண்டும். இதுதான் இரட்சிக்கப்பட்ட பாவியின் புதிய நிலைமை.

கேள்வி :—

பாவ மன்னிப்பும் ஒருவாறான நன்மையும் உண்டென்று உலகத்திலுள்ள எல்லா மார்க்

கங்களும் விசுவாசிக்கின்றன. அந்த மார்க்கங்கள் யாவும் குதிரைக்கு முன்பாக வண்டியைப் பூட்டுகின்றன. ஆனால் கிறிஸ்து மார்க்கம் ஒன்றே உண்மையான முறையை வெளிப்படுத்துகிறது. நீ மன்னிப்பு அடையும் பொருட்டு முதலில் நல்லவனாக வேண்டுமா அல்லது நீ நல்லவனாகும்படி முதலில் மன்னிப்படைய வேண்டுமா? இதிலே குதிரை எது? வண்டி எது?

V

பரிசுத்த ஆவி

இம் மாதத்தில் திரும்பத் திரும்ப யோவான் 14—16 அதிகாரங்களை வாசி.

அவர் யார் ?

யோ. 14 : 16. இன்னொரு தேற்றரவாளன்

லூக்கா 24 : 49
அப். 1 : 4
அப். 2 : 33, 39
} பிதாவின் வாகுத்தத்தம் யோவேல் 2 : 28, 32-ஓடு ஒப்பிட்டுப்பார்.

பரிசுத்த ஆவி ஓர் ஆளத்துவம்.

அவருடைய வேலை என்ன?

நியா. 6 : 34.	ரோ. 8 : 2, 11, 16, 26.
நியா. 14 : 6.	1 யோ. 3 : 24.
ஆதி. 41 : 38, 39.	1 யோ. 4 : 13.
யாத் 31 : 3—5.	ரோ. 5: 5.
ஆதி. 6. 3.	யோவான் 14 : 16, 26.
எபே. 1 : 13	யோவான் 15 : 26.
ரோ. 8 : 16.	யோவான் 16 : 7—14.
தீத். 3 : 5—7.	1 யோ. 2 : 20, 27.
எசே. 36 : 27.	2 பேது. 1 : 21.

ஆதி. 2 : 7-இல் சொல்லியிருக்கிற சத்தியம் நடந்தது முதல் தேவனுடைய ஆவியானவர் மனிதனோடிருந்து அவனுடைய எல்லாக் காரியங்களிலும் சிரத்தை எடுத்துக்கொண்டே வந்திருக்கிறார்.

கிதியோன், சிம்சோன், யோசேப்பு, பெசலெயேல் என்றவர்களுடைய ஜீவிய காலத்தில் அவர்கள் செய்யவேண்டியிருந்த வேலைக்குத் தேவையாயிருந்த வல்லமையைக் கொடுத்து அவர்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார். அவர் மனிதரோடு போராடி, அவர்களை அடக்கியும் ஏவியும் தன் வேலையை நடப்பிக்கிறார். பரிசுத்த ஆவியைப்பற்றி 88 வாக்கியங்கள் பழைய ஏற்பாட்டிலிருக்கிறது. இயேசு கிறிஸ்து ஜீவித்து மரித்து உயிரோடெழுந்து பரலோகத்திற்கு ஏறினபிறகு பரிசுத்த ஆவியானவர் திரித்துவத்தின் பிரதிநிதியாக அவருக்குள் நம்மைப் புது சிருஷ்டிகளாக்க நமது மத்தியில் வந்தார், 2 கொ. 5 : 17 பார்.

ஆவியானவர் உன்னில் இருக்கிறாரா?

யோவான் 14 : 17	1 கொரி. 6 : 19
ரோ. 8 : 9	கலா. 4 : 6
1 யோவான் 5 : 10a	யோவான் 3 : 5
1 கொரி. 3 : 16	கலா. 3 : 13, 14

ஒவ்வொரு உத்தம விசுவாசிக்குள்ளும் ஆவியானவர் இருக்கிறார். இருதயத்தில் பரிசுத்த ஆவியின் கிரியையில்லாமல் புது ஜீவனாவது குணப்படுதலாவது நேரிட முடியாது. பெந்தெகொஸ்தே நாளில் ஏற்பட்ட ஆதீனப்பத்திரத்தின்படி பரிசுத்த ஆவியானவர் உள்ளே

பிரவேசிப்பதில் உள்ள இரண்டு சாதாரண நிபந்தனைகளாவன, மனந்திரும்புதலும் விசுவாசமுமேயாம். அப். 2 : 38, 39 வாசிக்கவும். ஆகையால், எவன் தன் பாவத்தைவிட்டு மனந்திரும்பிப் பாவ மன்னிப்புக்காகத் தேவனுடைய குமாரனின்மேல் விசுவாசம் வைக்கிறுனே அவனுக்கு அவர் எப்போதும் அவனில் நிலைத்திருக்கக் கொடுக்கிற நித்திய ஈவு பரிசுத்த ஆவியானவரே.

நமது இருதயத்தில் ஆவியானவர் வாசஞ் செய்ய வருதல் தவருத சத்தியமேயாம். அவர் வரும்பொழுது உள்ளேயே தங்கியிருக்கும்படிக்கே வருகிருர். அவர் நம்மில் இருக்கிருர் என்பது நமது உணர்ச்சியளவாக மட்டும் நின்றுவிடாமல் சத்தியமாகவும் விளங்குகிறது.

———

ஆவியானவராலே உனக்கு ஜீவனின் பூரண வளர்ச்சியுண்டா?

தற்காலத்தில் இதுதான் முக்கிய கேள்வி.

சங். 36 : 8, 9	அப். 2 : 4
யோவான் 4 : 14	அப். 6 : 4, 8
யோவான் 7 : 37-39	எபே. 3 : 16
யோவான் 10 : 10	எபே. 5 : 18
அப். 1 : 8	கொலோ. 2 : 9, 10

எபே. 3 : 14—21-ஐ நன்ருய்ப் படித்து கலா. 5 : 22, 23-ஐக் கொண்டு உன் ஜீவியத்தை சோதித்துப்பார்.

உலகதோற்ற முதல் உண்டான நாட்களில் அளவற்ற சந்தோஷத்தைக் கொடுக்கும் நாள் பெந்தெகொஸ்தே நாள். ஏனென்ருல் அன்றுதான் பிதா வானத்தின் ஜன்னல்களை விரிவாய்த் திறந்து தம்முடைய பிள்ளைகளுக்கு ஒரே தடவையாகக் கிறிஸ்துவில் பூரண சுதந்தரத்தை அருளிச் செய்தார். அன்றுதான் சகோதர அன்பும், கிறிஸ்தவ தைரியமும் பிறந்தநாள். அப். 4 : 31—33.

சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரால் நிறைந்த மனுஷராகி பகிரங்கமாய்க் கிறிஸ்து தங்களில் வாசம் பண்ணுகிறவராக விளங்கினுர்கள். "கிறிஸ்து என் ஜீவன்" என்று ஒவ்வொருவரும் ஜெயத்தோடு கண்டுபிடித்தார்கள். பிலி. 1 : 21; கலா. 2 : 20; 1 கொரி. 1 : 30. ஒப்பிட்டுப்பார்.

இயேசு கிறிஸ்து ஆவியினுலே உன்னில் வாசம் செய்து, கிரியை நடப்பிக்கத் தம்மையே உனக்குக் கொடுக்க விரும்புகிருர்.

உலகத்தில் தேவை மிகக்கொடியதாயிருக்கிறது. ஜீவத் தண்ணீரின் நதிகளே அந்தத் தேவையை நீக்கி நிறைவை உண்டுபண்ணக்கூடும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உன் ஜீவியம் நீர் பாய்கிற வாய்க்காலாயிருக்க விரும்புகிருர். வாய்க்கால் ஆழமாய் வெட்டியிருக்க விரும்புகிருயா? வாய்க்கால் எவ்வளவுக்கெவ்வளவு பெரியதாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நீரோடையும் நிரம்பியிருக்கும்.

அவருடைய பரிபூரணத்தில் நீ எப்படிப் பங்கு பெறலாம்?

உன்னையே ஒப்புக்கொடு :

ரோ. 6 : 13, 19
ரோ. 12 : 1

உன் உரிமைகளைப் பாராட்டிக் கேள் :

மத். 5 : 6	விரும்பு
லூக். 11 : 13	கேள்
யோவான் 1 : 16	பெற்றுக்கொள்
அப். 5 : 32	கீழ்ப்படி

ஆவியானவரை அளவின்றிப் பெற்றுக் கொள்வதே தேவனுடைய பிள்ளையாகிய உனக்கு உள்ள சுதந்திரம். அந்த உரிமையைப் பாராட்டி ஊற்றுகளின் தண்ணீரை நிரம்பக் குடி. விசுவாசத்தினால் உரிமை பாராட்டுகிறது என்னவென்றால், முதலாவது கேட்பது, இரண்டாவது கேட்கும் போதே பெற்றுக் கொண்டோமென்று நிச்சயித்து எடுத்துக் கொள்வதுதான், சங். 107 :9.

ஆனால் முதலாவது தேவனுடைய உரிமையைச் செலுத்த வேண்டும். அவருக்கு உன் மேலிருக்கிற பாத்தியதையை உணர்ந்து பக்தி வினயத்துடன் அதற்கு உடன்பட்டு முழுவதுமாய் அவருக்குத் தத்தஞ்செய்து, உன்னுடைய சித்தத்திற்குப் பதிலாக அவருடைய சித்தத்தையே செய்ய உன் ஜீவியத்தை

அவர் எடுத்து உபயோகிக்கும்படியாக முழுவதுமாய் இடங்கொடுத்திருக்கிறாயா ?

மனுஷ ஜீவியத்தில் ஆவியின் பரிபூரணத்திற்கு இரண்டு தெளிவான நிபந்தனைகள் **ஒப்புக்கொடுத்தலும் விசுவாசமுமே யாம்.**

குன்றாத சிறந்த ஜீவிய அனுபவம் உனக்கு வேண்டுமா ?

அதின் இரகசியம் யோவான் **15: 10-12-ல்** எழுதியிருக்கிறது. இதைப் பின்வருமாறு **1** யோவான் **3 : 23, 24-ல்** விளக்கியிருக்கிறது.

1. இயேசு கிறிஸ்துவின் பேரில் இடைவிடாமல் சார்ந்திருப்பது.

2. மற்றவர்கள் மேல் குன்றாத அன்பு.

நிலைத்திருக்கிறதென்றால் இந்த இரண்டு கற்பனைகளையும் கைக்கொள்ளுதல். இந்த அர்த்தத்தில் "நிலைத்திரு" என்கிற வார்த்தை கிறிஸ்துவ ஜீவியத்தின் கடைசி வார்த்தை.

ஆகையினால் **விசுவாசம், அன்பு** என்ற இரண்டும், ஆவியின் வல்லமையினால் ஏற்படுகிற நிலையான முன்னேற்ற ஜீவியத்திற்கு இரண்டு தெளிவான நிபந்தனைகளாம்.

ஒரு கண்டிப்பான எச்சரிப்பு: எபே. **4 : 30-32.**

VI

கிறிஸ்தவ ஒழுக்கத்தின் பரிசுத்த லட்சணம்

தேவன் உனக்காகக் கொண்டிருக்கிற நித்திய நோக்கம் :

லேவி. *11 : 45.*	ரோ. *6 : 4.*
லேவி. *19 : 2*	மத். *5 : 44—48.*
1 பே. *1 : 15, 16.*	தீத்து *2 : 14.*
எபே. *1 : 4.*	*2* கொரி. *6 : 14—18.*
எபே. *2. 10.*	*1* தெச. *4 : 7.*

தேவன் உன்னுடைய சௌகரியத்தைப் பற்றிக் கவலைப்படாமல் எல்லாவற்றிற்கும் மேலாய் உன்னுடைய **குணத்தைப்பற்றித் தான்** கவலைப்படுகிறார். அவருடைய ஒவ்வொரு பிள்ளையும் அவரோடு முற்றிலும் ஐக்கியமாய்ச் சகவாசம் செய்யவேண்டுமென்பதே பிதாவின் நோக்கம். தேவன் உன் விஷயமாகக் கொண்டிருக்கிற சிறந்த நோக்கம் யாதெனில், நீ கிறிஸ்துவின் சாயலை உடையவனாய் அதாவது மெய்யான தேவக் குடும்பத்தின் சாயலைத் திரும்ப அடைந்தவனாய் இருக்க வேண்டும் என்பதே. ரோமர் *8 : 29* பார்.

இயேசுவின் பரிசுத்தம் அல்லது பரிபூரண குணாதிசயம் உன்னில் தெளிவாயும் ஆழமாயும்

பதியும்படி சுவிசேஷங்களில் எழுதப்பட்டிருக்கிற அவருடைய ஜீவிய சரித்திரத்தை ஓயாமல் படி. அவர் தேவனின் சித்தத்தை நிறைவேற்றுவதைப் போஜனமாகக் கொண்டதையும், அந்த வேலையைச் செய்து முடிப்பதில் இருந்த ஊக்கத்தையும், அவருடைய மாறாத சந்தோஷத்தையும், அமரிக்கையான நம்பிக்கையையும், அவருடைய நீடிய பொறுமையையும், பூரண தன்னடக்கத்தையும், அவருடைய தாழ்மையையும், அமைதியையும், மாசற்ற இருதய சுத்தத்தையும், அவருடைய பயமின்மையையும், அவருடைய அன்பு சிநேகம் முதலியவற்றின் ஐசுவரியத்தையும், அவர் நீதியின் மேல் கொண்ட பசிதாகத்தையும், அவர் தேவனோடு கொண்டிருந்த ஐக்கியத்தைப் பற்றி அவருக்கிருந்த ஒப்பற்ற அறிவையும் கவனி. 'அவர் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராயிருந்தார்.' யோவான் *1 : 14.*

தேவன் பேரில் உள்ள விசுவாசத்தை ஆதாரமாய்க் கொண்ட மிகவும் தீவிரமான கடமையறிவுதான் கிறிஸ்தவ ஒழுக்கத்திற்கு மூலாதாரமாய் விளங்குகிறது. இந்த இலட்சணம் கிறிஸ்துவின் ஜீவியத்தில் முதலிலிருந்தே பகிரங்கமாய்க் காணப்படுகிறது.

லூக். *2 : 49.*	லூக். *9 : 51.*
யோ. *9 : 4.*	யோ. *11 : 8—11.*
மாற்கு *8 : 31—34.*	யோ. *12 : 27—28.*
மாற்கு *10 : 32—34.*	லூக். *22 : 42.*
யோ. *4 : 34.*	யோ. *18 : 11.*

யோ. 1 : 6-லுள்ள "அனுப்பப்பட்ட" என்ற வார்த்தை அந்தச் சுவிசேஷத்திற்குத் திறவுகோலாயிருக்கிறது. யோவான் 4 : 34-லிருந்து தொடங்கி அவ்வார்த்தையை இயேசு தன்னைப் பற்றி உபயோகித்திருக்கிற இடத்தையெல்லாம் குறிப்பிடு. அப்படிச் செய்யும் பொழுது மிகவும் ஆச்சரியமான ஒரு சத்தியத்தைக் காண்பாய். பிதாவுக்காக ஜீவியம் செய்து அவருக்காகவே அவருடைய வேலையை முடிப்பதில் தமது ஜீவனை ஒப்புக்கொடுக்கவே தாம் அனுப்பப்பட்டார் என்ற நிச்சயம் அவர் மனதில் ஆழமாய்ப் பதிந்திருந்தது. கடைசியில் அவரால் என்ன சொல்ல முடிந்தது என்று பார். யோ. 17 : 4.

ஒரு பெரிய நோக்கத்திற்காக நீ இவ்வுலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறாய். உன் ஜீவியத்தைப்பற்றித் தேவனுக்கு விசேஷித்த ஒரு உத்தேசம் உண்டு. நீ அவருக்கு உண்மையாயிருந்து, உன் கடமையை நிறைவேற்றுவாயா ?

ஒழுக்கத்தின் மாட்சிமையைப் பவுல் நன்றாய் அறிந்திருந்தான். அவன் தன்னுடைய புது கிறிஸ்தவர்களுக்காகப் பண்ணின ஜெபங்களும், எடுத்த முயற்சிகளும் இந்நோக்கத்தையே கொண்டிருந்தன.

1 தெச. 3 : 12, 13.
1 தெச. 5 : 23, 24.
எபே. 4 ; 13.
பிலி. 2 : 14, 15.

கொலோ. 1 : 28, 29.
எபி. 6 : 1 ஒப்பிட்டுப்பார்.

எபே. 4 : 17—5 : 21 வாசித்து, அவன் ஜீவியத்தின் பரிசுத்தத்தை எவ்வளவு தூரம் வற்புறுத்திப் பேசுகிறானென்று பாருங்கள். சங். 15; 24 : 3-5; ஏசா. 33 : 14-16; மீகா. 6 : 8.

1 கொரி. 13 ஐயும் வாசி. கிறிஸ்தவ ஒழுக்கமின்றி, உன்னுடைய எல்லாத் தாலந்துகளும் வியர்த்தமேயாம். பவுல்கூட எப்போதும் முன்னானவைகளையே நாடி அடைய ஆவலோடு தொடர்ந்து சென்றான். பிலி. 3 : 10—14. "தேவனின் ஆகாயத்தின் கீழே உன்னுடைய பூரண ஆவிக்குரிய வளர்ச்சியை அடைவதே ஜெயம்" என்று கார்லைல் (Carlyle) என்பவர் சொல்லுகிறார். பரிசுத்தமே உண்மையான ஜெயம்.

தேவன் உனக்காகச் செய்திருக்கிற போதுமான ஏற்பாடு.:

எசே. 36 : 25-27.	எபே. 1 : 17-23.
1 யோ. 1 : 7	எபி. 7 : 25.
1 கொரி 1 : 30	பிலி. 4 : 13, 19.
1 கொரி. 3 : 21-23.	2 கொரி. 12 : 9.
2 கொரி. 9 : 8, 15.	யூதா 24.
ரோ. 8 : 32.	1 கொ. 15 : 10a
2 பே. 1 : 2-8	எபே. 4 : 24.

104-ம் சங்கீதம் வாசித்த பிறகு சங்: 103 : 1-5ஐ திருப்பிப்பார். இயற்கை மண்டலத்தில்

உதாரமாய் உவந்தளித்த தேவனுடைய கரம் கிருபை மண்டலத்தில் குறுகிவிடுமோ? நீ இப்பொழுது இருக்கிற நிலைமை எப்படிப்பட்டது என்று பாராமல், நீ அவருடைய கிருபையைப் பெறுங்காலத்தில் எப்படிப்பட்டவனாகக்கூடு மென்பதையே தேவன் பார்க்கிறார்.

இதனால்தான் அவர் யாக்கோபோடு பொறுமையாயிருந்தார். சுபாவப்படி அவனுக்கு வஞ்சகமும் அரோசிக்கப்படத்தக்க இழிவான குணமும் இருந்த போதிலும் தேவன் தமது ஆவியால் அவனைத் தொட்டுப் பழக்கி மறுரூபப் படுத்தக்கூடிய இருதயம் அவனுக்கிருந்ததைக் கண்டு அவன் விஷயத்தில் பொறுமையாயிருந்தார். ஆகையினால் தேவன் உன்னைப் பற்றி மனஞ்சோர்ந்து போகிறதுமில்லை. நீ அவருடைய பரிசுத்தத்தில் பங்கு பெறும்படியாக உன்னை சிட்சிக்கவும் தாமதிக்கிறதுமில்லை. எபி. 12 : 5-13 பார். உன்னைத் தம்முடைய சினேகிதனாகும்படியான தகுதியுடையவனாக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

பரிசுத்தத்திற்கு ஒரு பெரிய தூண்டுகோல்:

1 யோ. 3 : 1-3. *எபி. 12 : 14.*
மத். 5 : 8. *2 பே. 3 : 11-14.*

நீதியின் ராஜா சீக்கிரம் தோன்றுவார்.

கேள்விகள் :—

(1) தேவன் உனக்காகக் கொண்டிருக்கிற சிறந்த நோக்கத்தை நீ அடைய வேண்டுமென்று துணிகரமாய் முயலுகிறாயா ?

(2) உங்களுடைய கிறிஸ்தவ ஒழுக்கத்தில் பெலவீனமாய்க் காணப்படுகிறவைகளைச் சீர்ப் படுத்திப் பெலப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு ஜெபத்தின் மூலமாய்ப் புதிய ஆத்துமீக சக்தியைப் பெற விரும்புகிறாயா ?

VII

சோதனை

1 யோவான் 2 : 16-ல் மூன்று வகையான சோதனைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறதைக் கவனியுங்கள். அவைகள் ஆதியாகமம் *3:6* லும் மத்தேயு *4 : 1-11* லும் புலப்படுகிறதா என்று பாருங்கள்.

சோதிப்பவன் யார் ?

யாக். 1 : 13-14 — *லூக். 22 : 31*
ஆதி. 22 : 1 — *1 நாளா. 21 : 1*
மத். 4 : 1 — *யோபு 1 : 6-12*
1 பே. 5 : 8

——

நீ எதிர்த்து நின்று போராடுகிறாயா ?

ரோமர் 7 : 15—25 பார்க்கவும்.

இந்த வசனங்களில் நெடுக சிறந்த மனத் தன்மையும் கீழான மனத்தன்மையும் இரண்டும் ஒன்றையொன்று எதிர்த்து மேற்கொள்ளப் பார்க்கின்றன. ஆயினும் இவற்றுள் எது முந்திக் கொள்ளுமென்பது சந்தேகத்திற்கிடமாயிருக்கிறது; எனினும் கலாத்தியர் *5 : 17* ஐயும் ரோமர் *8 : 2*-ஐயும் வாசித்துப் பாருங்கள்.

நீங்கள் கிறிஸ்துவின் சார்பில் தீர்மானம் செய்கிறபொழுது, நீங்கள் சாத்தானுக்கு எதிராகப் போராறை கூவி எதிர்த்து நிற்கிறீர்கள். ஆகையால், அவன் உங்களை வீழ்த்துவதற்காக ஓயாமல் சூழ்ச்சி செய்து மாம்ச உலக எண்ணங்களை ஓயாமல் உங்களுக்குள்ளே இன்னிசையாய் ஒலிக்கச் செய்துகொண்டேயிருக்கிறான்.

ஒவ்வொரு சோதனையிலும், தேவன் நம்மைப் பரீக்ஷை செய்கிறார்; சாத்தானோ நம்மைச் சோதிக்கிறான்.

நன்னெறிப் போரிலே விளைவதுதான் ஒழுக்கம். தீமையை எதிர்த்து நன்மையைத் தெரிந்து கொள்ளும் பொழுதெல்லாம் நீங்கள் பகைவன் மேல் விசேஷித்த வெற்றி பெறுவீர்கள்.

சோதனை ஏற்படுவது வெட்கக் கேடான ஒரு காரியமன்று; ஆனால் மிகப் பெரிய தீரச் செயல்கள் செய்து ஜெயவீரனாய் விளங்குவதற்கு வாய்த்த நேரங்களேயாம். சோதனைக்கு இணங்காதே; ஏனெனில் **இணங்குதலே** பாவம்.

———

நம்முடைய தலைவருக்குச் சோதனைகளேற்பட்டதுண்டா?

மத் : 4 : 1ஓடு — *மாற்கு. 1 : 13 ஒப்பிடு.*
யோவான் 6 : 15 — *லூக். 22 : 28, 39-46*

மாற்கு. 8 : 33 மாற்கு 15 : 4, 5, 31, 32
எபி. 4 : 15

உங்களுடைய தலைவர் பகைவனுக்கெதிராய்ப் பாளையமிறங்கி நாற்பது நாட்கள் நீடித்த போர் புரியச் சென்றதைப் பாருங்கள்! மிகப் பெரிய சோதனைகளின் ஆரம்பம் அவருக்கும் அப்பொழுது உண்டாயிற்று. உலகத்தில் தோன்றிய மனிதர் அனைவருக்கும் ஏற்படாத சோதனை நமது நாயகருக்கு ஏற்பட்டதுண்டு. நீங்கள் அவருடைய தொண்டர் கூட்டத்தில் சேர்ந்து அவருடைய நாமம் விளங்க முன்னின்று வழிகாட்டிச் செல்வீராயின் உங்களுக்கும் நிறைவான சோதனை ஏற்படுவது நிச்சயம். ஆபிரகாம், யோபு, யோசேப்பு, மோசே, தாவீது, தானியேல், பவுல் முதலியவர்கள் பிரமுகர்களாயிருந்தார்கள். ஆகையால், அவர்கள் யாவரிலும் அதிகமாய்ச் சோதிக்கப் பெற்றவர்கள். அவர்கள் சாத்தானுடைய சகல தந்திரங்களுக்கும் இலக்காயிருந்தார்கள். நீதி யெனப்படுவது பரிசோதிக்கப்படாத சிறு பிள்ளைத் தன்மையாயிராமல் ஜெயம் பெறும் இலக்ஷணமாய் விளங்குகின்றது.

———

தேவன் ஏன் நம்மைச் சோதிக்கப் படும்படி விட்டுவிடுகிறார்?

இந்தக் கேள்விக்குச் சிறந்த பதில் "நம்முடைய தலைவராகிய இயேசு கிறிஸ்து ஏன் சோதனைகளை எதிர்த்துப் போராடவேண்டியதாயிருந்தது?" என்று எதிர்க்கேள்வி கேட்பதினால் விளங்கும்.

இந்தக் கேள்விக்குப் பதிலாக மூன்று காரணங்கள் புலப்படுகின்றன.

1. பரிசுத்த ஆவியானவருடைய தலைமையின் கீழ், அவர் சோதனைகளுக்கு ஆளாகாமல் பிசாசு, மாம்சம், உலகம் என்னும் பகை மீது பூரண ஜெயம் பெறுவதற்காகவே சோதிக்கப் பட்டார். மத். 4 : 1—11 பார்க்கவும்.

மனிதன் எதிர்த்து நின்று மேற்கொண்டு தன் காலின் கீழ் மிதித்துப் போடுவதற்கல்லாமல் மற்றெதற்காகச் சோதனைகள் வருகின்றன?

2. அவர் புதிய பெலனை அடையும் பொருட்டாக.

ஓாக். 4 : 13 1 பே. 1 : 6—7
எபி. 2 : 10 யாக். 1 : 2—4

போராடுந்தோறும் நீங்கள் பெலனடைகிறீர்கள். ஒவ்வொரு வெற்றியும், மேலும் அடையப்போகிற புதிய வெற்றிக்குக் காரணமாகிறது.

3. அதிக அநுதாபமுள்ளவராய்த் தமது சகோதரர்களுக்குக் கனிவுள்ள இருதயத்தோடு ஊழியம் செய்யும் பொருட்டே, அவர் சோதிக்கப்பட்டார்.

எபி. 2 : 17, 18 லூக். 22 : 32
எபி. 4 : 15, 16 2 கொரி. 1 : 4

இந்தச் சிந்தனைகள் உங்களுக்கு ஏற்படுகிற சோதனைகள் விஷயத்தில் புதிய கருத்துக்களை யும் அறிவையும் தருகின்றனவா?

———

சோதனைகள் ஒருபொழுதும் முடிவடைகிறதில்லை. நீங்கள் பரமராஜ்யத்தை நோக்கிக் கிறிஸ்தவ ஜீவியக்குன்றின் மேலேறிச் செல்லுந் தோறும் சோதனைகள் வளர்ந்துகொண்டே வரும். ஒரு கிறிஸ்தவனுக்கு மணிதோறும், நாள்தோறும் வர இருக்கிற சோதனைப் போர்களை பள்ளந்தோண்டி மறைந்து நின்று போராடும் 'டிரெஞ்சு' (Trench warfare) யுத்த முறைக்கு ஒப்பிடலாம். நீங்கள் பள்ளத்தில் பதுங்கி நிற்கிற பகைவனோடு ஓயாமல் போராடுகிறீர்கள். உங்களுக்கு ஏற்படுகிற ஒவ்வொரு சோதனையும், தேவன் உங்களை முன்னிலும் அதிகப் பெலசாலியும், அதிகப் பரிசுத்தமும் உடையவர்களாக்கி, முன்னிலும் அதிகமாய் மற்றவர்களுக்கு பயன்படுமாறு உபயோகிப்பதற்கு வாய்த்த தருணமேயாம். நீங்கள் பகைவனைத்தாக்கி வெல்லுந்தோறும் மேலும் எதிர்த்து நின்று ஜெயம்பெறத் திறமை பெறுகிறீர்கள்.

———

கேள்வி :—

யோவான் 17 : 15-ல் உள்ள சிந்தனை என்ன?

VIII

ஜெயத்தின் இரகசியம்

உங்கள் சரீரங்களை ஒப்புக் கொடுங்கள்:

ரோமர் 6 : 13, 16, 19
ரோமர் 12 : 1
1 கொரி 6 : 19, 20

இந்த இரகசியம் ஊழியத்திற்குச் சொந்தமானது. நீ மகிமையின் இராஜாவினுடைய ஊழியத்திலிருக்கிறாயா? உன் அவயவங்கள் ஏதாவது ஒரு எஜமானுக்கு அடிமைகளாயிருக்க வேண்டும். நீ இரண்டு எஜமான்களுக்கு ஒரு போதும் ஊழியஞ் செய்ய முடியாது. ஒரு கையில் கிறிஸ்துவைப் பற்றிப் பிடித்தலும்மற்றொரு கையால் பாவஞ்செய்தலும் உன் ஜீவியத்தைப் பாழாக்குதலே யன்றி மற்றப்படியன்று. நீ அவ்வாறு செய்கையில் பிசாசுக்கே ஊழியஞ் செய்கிறாய். உன் சரீரம் உனக்குச்சொந்தமல்ல; மீட்பின் உரிமையால் கிறிஸ்துவுக்கே சொந்தமானது. இரண்டையும் சரிக்கட்டப்பார்க்காதே.

நீ தெரிந்து கொள்வதைப்பற்றி தெளிவும் தீர்மானமும் உள்ளவனாயிரு; நீ உன் சரீரத்தை தேவகுமாரனுக்கு ஒப்புக்கொடு. நீ விரும்புகிறதாயிருந்தால் அவர் எப்படிப்பட்ட சங்கிலிகளையுந்தறித்து உன்னை விடுவிக்க வல்லவராயிருக்கிறார்.

ஒவ்வொரு நாளின் ஆரம்பத்திலும் உன் ஜீவனைப் புதிதாக அவரிடத்திலே ஒப்புக்கொடு. சிலுவையின் அடியில் உன்பாவங்களை விட்டுவிடு. அவருடைய குமாரனுடைய மரணத்திலே நீயும் பாவத்திற்குச் செத்தவனுய் உன்னைக் கணக்கிட்டுக்கொள்; இப்பொழுது நீ பிழைத்திருக்கிறதோ உனக்காக ஒப்புக்கொடுத்த அவருடைய குமாரனிலே பிழைத்திருக்கிருய் என்ற பூரண அறிவைப் பெற்றுக்கொள்.

ரோ. *6 : 2, 3, 4, 5, 11, 12*
2 கொரி. *5 : 14, 15*
கலா. *6 : 14*

என்ற வசனங்களைப் பார்க்கவும்.

உன் சேனுபதியை நம்பு:

எபிரேயர் *11—12 : 4* வாசி

சோதனைகளும் பரீட்சைகளும் ஏற்பட்ட காலங்களில் அடைந்த வெற்றிகளின் வரலாறு இந்த அதிகாரங்களில் அடங்கியிருக்கிறது. ஆபிரகாமின் சோதனைகளும் பரீட்சைகளும் எவை? (வசனம் *8-19*). அப்படியே மோசேக்கு உண்டான சோதனைகளும் பரீட்க்ஷைகளும் எப்படிப்பட்டவை? (வசனம் *24-29*).

வசனம் *32*-லிருந்து *38* முடிய வாசித்து விசுவாசத்தினுல் ஆகக்கூடிய வல்லமையான காரியங்களைக் கவனி. வாசித்த வசனங்களிலெல்லாம் எத்தனை முறை விசுவாசம் என்ற

சொல் வருகிறது? ஜெயம் பெறுகிற விசுவாசம் ஓட்டத்தை முடிக்கிறதற்கு வேண்டிய பெலத்திற்காக தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிற இயேசுவையே நோக்கிப் பார்க்கிறது. எபிரேயர் *12: 1, 2;* முக்கியமாக எபிரேயர் *11 : 10, 27*.

(a) அவர் தம்முடைய அடியார்களுக்கு உண்மையுள்ளவர்.

அவர் எப்பொழுதும் மத்தியஸ்தமாய் நின்று பரிந்து பேசுகிருர்—எபிரேயர் *4 : 15, 16; 7 : 25*. அவர் மத்தியஸ்தமாய் நமக்காகப் பரிந்து பேசுகிறதினுடைய நன்மையை நம்மால் அளக்க முடியாது. பேதுரு மறுபடியும் தேவனுடைய கிருபைக்குப் பாத்திரமானதற்குக் காரணம் அவருடைய மத்தியஸ்த ஜெபமென்றே யாவரும் கருதுகின்றனர். லூக்கா *22: 32, 33* பார்க்கவும்.

அவர் சோதனைக்காரனைத் தடை செய்கிருர்—யோபு *1: 12; 2:6;* சங்கீதம் *103 : 13, 14;* யோவான் *10 : 27—29; 1* கொரிந்தியர் *10 : 13;* யாத்திராகமம் *13 : 17, 18* ஒப்பிடு.

சாத்தான் சர்வவல்லமை உள்ளவன் அல்லன். சாத்தான் நம்மைச் சோதிக்கும்படி தேவன் அவனுக்கு இடங்கொடுத்தபோதிலும் அவர் அவனை அடக்கி ஆளுகிருர்; பகைவன் தேவனுல் குறிக்கப்பட்ட எல்லைக்கோட்டைத் தாண்டி நம்மிடம் வர அவனுக்கு அதிகாரமில்லை; தேவன் அவனை முற்றிலும் அடக்கி ஆளுகிருர்.

(b) உங்களுடைய ஜீவனை முற்றிலுமாய் அவருடைய பாதுகாப்பிற்கு ஒப்புக்கொடுங்கள்.

2 தீமோத்தேயு 1: 12; 1 பேதுரு 4: 19; சங்கீதம் 25 : 15-உம் யூதா 24-உம் ஒப்பிடு.

(c) அவர் எப்பொழுதும் ஜெயங் கொள்ளுகிற ஒரு சேனையை ஆளுகிறார். நீங்கள் அந்தச் சேனையின் பாரம்பரியமான வெற்றிக் கொடியைக் காக்கவேண்டுமென்று விரும்புகிறார்.

வெளி. 2 : 7, 17, 26	ரோ. 8 : 37
வெளி. 3 : 5, 12, 21	2 கொரி. 2 : 14
பிலி. 4 : 13	1 யோ. 4 : 4, 5

உன்னை அடிக்கடி கவிழ்த்திப் போடுகிற பாவம் திரும்பவும் உன்னை மயக்கி வசப்படுத்த முயலுகிறபொழுது, நீ உனக்குள்ளே, "எனக்கு முன் தோன்றினவர்கள் எந்த இடத்தில் விழுந்தார்களோ அந்த இடத்தில் நான் வெற்றி வீரனாய் ஜெயம்பெற்றுச் சேனையின் அணியில் ஏற்பட்ட கோணலை நேராக்க வேண்டுமென்று என் சேனாபதி என்னிடத்திலேதான் எதிர்பார்க்கிறார்" என்று சொல்லிக்கொள்வது உனக்கு மிகுந்த நன்மையாயிருக்கும். நீ உண்மையாயிருப்பாய் என்று தேவன் உன்னை நம்பலாமா?

முன்னதாகவே சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுதல்:

ஜெபசிந்தையோடிரு. மத்தேயு 26 : 41; 1 பேதுரு 4 : 7.

எபேசியர் 6 : 10—18-ல் சொல்லியிருக்கிற சர்வாயுத வர்க்கத்தையும் ஆராய்ந்து பார். அவை ஒவ்வொன்றும் எதைக் குறிக்கிறதென்று தியானித்து அதை அணிந்துகொள்!

காலாகாலங்களில் முகத்தைப் பரத்திற்கு நேராக உயர்த்தி உள்ளத்தினாழத்திலிருந்து எழும்புகிற சிறு ஜெபங்களை மறக்கவேண்டாம். சோதனைகள் திடீரென்று தாக்குகிறபொழுது தேவனுடைய கிருபாசனத்தின் சன்னிதியில் நீங்கள் ஒரு சிறு ஜெப மன்றாட்டை 'பட்' என்று எழுப்புங்கள்; அப்பொழுது நீங்கள் சங்கீதம் 46 : 1; ஏசாயா 59 : 19; மத்தேயு 14 : 30, 31 இவைகளின் சத்தியத்தை அறிந்துக் கொள்வீர்கள்.

யுத்தத்தின் மும்முரத்திற்குப் போதிய அளவு யுத்த தளவாடங்களும் வெடி மருந்து முதலியவைகளும் ஆயத்தமாயிருக்கட்டும்.

வேதவாசிப்பு, ஜெபம் அனுபவத்திலிருந்து படித்த பாடங்கள் முதலியவற்றால், நீங்கள் எவ்வளவிற்கு வேண்டுமாயினும் யுத்த சாமக்கிரியைகளை அதிகரித்துக் கொள்ளுவதோடு எதிர்பாராத அபாய காலத்திற்குக்கூடப் போதுமான அளவிற்குச் சேகரித்து வைத்துக்கொள்ளவுங் கூடும்.

நீ உன் ஜீவியத்தில் முன்னதாகவே தேவ வசனத்தில் எந்தப் பாகத்தை அனுபவத்தில்

கொண்டுவந்திருக்கிருயோ அதே பாகத்தைத் தான் ஆவியானவர் சோதனை உண்டாகிற பொழுதும் உன்னிடத்தில் உபயோகிப்பார்.

ஆகையால் ஒவ்வொருநாளும் ஜெபத்திற்கும் வேத வாசிப்புக்குமுரிய காலத்தை மகா ஜாக்கிரதையாகக் காத்துக்கொள்.

வல்லமையும் நிலைவரமுமான கிறிஸ்தவ ஜீவியத்தின் மூலாதார இரகசியம் "தேவனோடு தனித்திருத்தல்" என்பதே. ஏசாயா 40 : 31; மாற்கு 1 : 35-பார்க்கவும்.

விழித்திரு.

சாதனை உள்ளவனுயிரு. ஜெயம் பெற விரும்புகிறவன் தன் புத்தியுத்தியை உபயோகிக்க வேண்டும். நீ பகைவர்கள் மத்தியில் நிற்கிருய். இளைப்பாறுதலைக் குறித்துச் சிந்திப்பதற்கே நேரமில்லை; உனக்குள்ள சகல உதவிகளையும் ஆதரவுகளையுங் கொண்டு நீ இப்பொழுது போர் புரிய வேண்டும். ஜாக்கிரதையாயிரு! விழித்திரு! நீ நின்று போராடுகிற போர்க்களத்திலே ஜெயம் பெற வேண்டுமானுல், உன் இயற்கையறிவும், உன் சித்தமும், உன் புத்தியும், உன் விசுவாசமும் உனக்கு இப்பொழுது மிகவும் அவசியமானது. வெற்றி பெறும் பொருட்டு வழி முறைகளைச் சிந்தித்து வரையறுத்துக்கொள்; உன்னை எதிர்க்கிற பகைவனுக்கு ஏற்றவாறு உன் யுத்த வித்தையைத் திறமையாகக் கையாடு.

(1) உன்னைச் சூழ்ந்து நிற்கும்பகை—சகல விதமான கவர்ச்சிகளும் கண்ணிகளும் கொண்டு உன்னை மருட்டி மயக்கும் உலகம்.

வலையில் சிக்குண்டு இழுக்கப்பட இடங்கொடாதே.

எபி. 11 : 24—26; 1 யோ. 2 : 15;
2 தீமோ. 2 : 4; நீதி. 4 : 14, 15, 23-27.

ஜெயம் பெரும்பாலும் கண், வாய், கால் என்பனவற்றை, விசேஷமாக இருதயத்தைச் சம்பந்தப்பட்டிருக்கிறது. சோதனை அதிகமாய் ஏற்படக்கூடிய இடங்களுக்கு துணிந்து செல்வது முழு மூடத்தனமேயன்றி மற்றப்படியன்று. சில விஷயங்கள் தம்மளவில் தப்பாகவும் பாவமாகவும் காணப்படாவிட்டாலும், உங்களுடைய ஆவிக்குரிய ஜீவிய வளர்ச்சியின் பொருட்டாயினும் மற்றவர்கள் பொருட்டாயினும் அவற்றைத் தூரமாய் அகற்றி அப்புறப்படுத்தலே உத்தமமானது.

உனக்கும் தேவனுக்குமுள்ள ஐக்கிய அறிவை மந்தப்படுத்தி உன் ஆத்துமீக ஜீவியத்தின் கருக்கை மழுக்கிவிடக்கூடிய காரியங்களைச் செய்யும் பழக்கம் உன்னிடத்திலிருக்கிறதா? உன் பகுத்தறிவைப் பலவீனப்படுத்தி, உன் மனச்சாட்சியின் மென்மையைக் கெடுத்து, உனக்குள்ள தேவ அறிவை மந்தாரமிட்டு மறைத்து, ஆவிக்குரிய காரியங்களில் உனக்குள்ள ஆவாவைக் கெடுத்து விடுகிறது எதுவோ அதுவே பாவம். உன் மாம்சத்தின்

ஆட்சி அதிகாரத்தைப் பெருக்கி உன் சித்தத்தையும் புத்தியையும் மேற்கொள்ளச் செய்கிறது எதுவோ அதுவே பாவம். அது எவ்வளவு சாதாரணமாகக் காணப்பட்டாலும் பாவமேயாகும்.

தேவனுக்கும் உனக்குமுள்ள நெருங்கிய உறவைக்கெடுத்து, கிறிஸ்துவின் அருமையைக் குலைத்து, நித்திய வாழ்வை நிச்சயமற்றதாக்குகிற எந்தப் புஸ்தகத்தையும் வாசியாதே; எந்த இடத்திற்கும் போகாதே; எந்தச் சினேகிதமும் கொள்ளாதே.

பவுல் அப்போஸ்தலன் இதற்குமப்பால் ஒரு படி ஏறித் தன் ஜீவியத்தில் எது சரி எது தப்பு என்று கண்டுபிடிக்கிறதற்கு, மற்றவர்களுக்குப் "பக்தி விருத்தியை உண்டு பண்ணுதலையே" அல்லது மற்றவர்களின் ஆத்துமீக ஜீவிய வளர்ச்சியையே உரை கல்லாக உபயோகிக்கிருன். 1 கொரிந்தியர் 6 : 12; 7 : 31; 8 : 9, 13; 9 : 12; 10 : 23, 31, 33; ரோமர் 14 : 21; 15 : 1-3.

நீ உன் ஜீவியத்திலும் "தகுதி" இது என்றும் "தகுதி இன்மை" இது என்றும் அறிய பவுலப் போஸ்தலன் கையாடின அதே உரைகல்லைக் கையாடு. ஏதாவது ஒரு விஷயத்தில் உனக்குச் சந்தேகம் ஏற்பட்டால் "இது தப்பா?" என்று கேள்வி கேட்காமல், "இது ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அநுகூலமா?" என்று உனக்குள்ளே கேட்டுக்கொள். கடைசியாக கலாத்தியர் 6:14 வாசி.

(2) உனக்குப் பக்கத்திலே பகைவன்:— மிகவும் அகன்ற தேவதூஷணம் செய்யும் சாத்தான்.

உறுதியான விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவனுய் அவனை எதிர்த்து நில்.

யாக்கோபு 4: 7b; 1 பேதுரு 5 : 8, 9; எபேசியர் 6: 16.

(3) உனக்குள்ளே இருக்கிற பகைவன் :— தன் வலிமையுள்ள காமாதி ஆசைகளோடு கூடிய கீழான 'நான்' அல்லது மாம்ச சுபாவம். இது குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு.

உன்னுடைய ஜீவியத்தில் இந்தப் பகைவனுக்குள்ள சகல பாத்தியதையையும் நிராகரித்துத் தள்ளு.

மாற்கு 8 : 34, 35; கலாத்தியர் 5 : 24.

நீ அணைக்க விரும்புகிற அக்கினியை விறகிட்டு வளர்க்காதே.

ரோமர் 13 : 14; 1 பேதுரு 2 : 11.

சாதனைக்குகந்த சில குறிப்புகள்.

முளையிலே கிள்ளு !

சோதனைகளின் மேல் படையெடுத்து வெற்றி பெறுதலாவது காரியங்களின் மேல் வெற்றி

பெறுதலாயிராமல் எண்ணங்களையே வெல்லுதலாம். மெய்யான போர் உள்ளத்தில் நிகழ்கின்ற யுத்தமேயாம். மனுஷ ஆத்துமா என்னும் நகரத்தைக் காப்பாற்றுகிற செவி, வாய், கண் என்ற வாசல்களைக் காத்துக்கொள். உள்ளே பிரவேசிக்க பகைவனுக்கு இடங்கொடாதே. உன்னைச் சோதிக்கிற காட்சிகளை விட்டு உன் கண்களைத் தூரமாய் விலக்கு; பாவ எண்ணங்களை எழுப்புகிற கதைகளுக்குச் செவிடனாயிரு; பரிசுத்த ஜீவியம் செய்வதற்குத் தடையாகவும் ஆண்டவருடைய ஊழியத்திற்கு அபாத்திரத்தன்மையாக்குவதுமான உணவு எதுவாயினும் அதை அகற்றிவிடு. சில சமயங்களில் நீ செய்ய வேண்டிய மிகவும் உத்தமமான காரியம் யாதெனில் அபாயத்திற்கு ஏதுவான இடங்களை விட்டு ஓடிப்போவதேயாம். பொய் சொல்லவோ ஆணையிடவோ சோதிக்கப்படும் பொழுது, சங்கீதம் 141 : 3 உன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுகின்ற ஜெபமாயிருக்கட்டும்.

உண்மைக்கு உடன்பாடாக வாழ் !

வெறுமையாயிருக்கும் மனமும் வேலையற்ற கரமும் வெகு எளிதில் சோதனைகளுக்கு அடிமையாகும். தீமையான சிந்தனைகளைத் தவிர்க்க வேண்டுமானால் நன்மையானவைகளைச் சிந்திப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆகையால், உன் மனம் சீரிய சிந்தனைகளிலும், உயர்வான உத்தம நோக்கங்களிலும் ஈடுபட்டிருக்கட்டும்.

சோம்பலுக்கு இடமில்லாதபடி ஆவிக்குரிய ஜீவியத்திற்குகந்த காரியங்களைப் பொழுது போக்காகத் தெரிந்துகொண்டு அவைகளிலே மகிழ்ச்சியடையப் பழகு. விளையாடும் நேரங்களில் மிகவும் உற்சாகமாய் முழுமனதோடு விளையாடு. கொண்ட இலக்கைத் தொடர்ந்து செல்; பக்கவழிகளைத் தவிர். நிலையான அலுவல் தன்னளவிலே உனக்குற்ற பெரும் பாதுகாப்பானது. எல்லாவற்றிற்கும் மேலாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய உலக வியாபகமான பரம இராஜ்ஜியத்தைக் கட்டுந்தொழிலில் உனக்கும் ஒரு பங்குகிடைக்கப் பேராவலுள்ளவனாயிரு. பிலிப்பியர் 4 : 8; கொலோசெயர் 3 : 2; கலாத்தியர் 5 : 16; ரோமர் 13:14; 2 தெசலோனிக்கேயர் 3 : 10-12 வாசித்துப்பார்.

உனக்குகந்த நட்பை ஆராய்ந்துக் கொள்.

நட்பெனப்படுவது நன்மைக்கோ தீமைக்கோ ஏதுவான மகாவல்லமையைத் தன்னுள்ளே கொண்டதாகும். நீதிமொழிகள் 13 : 20; 18 : 24. உனக்கு ஆத்துமீக ஜீவியத்தில் தடையாயிருக்கிற எந்தச் சினேகிதத்தையும் அறவே ஒழித்துவிடு. நீ உன் ஜீவனைக் காப்பாற்றுவதற்காக இவ்வாறு செய்யவேண்டியது மிகவும் அவசியமாயிருக்கும்; ஒருவேளை உன் சினேகிதனுடைய ஜீவனைக்காக்கும் பொருட்டும் அது அவசியமாகவே இருக்குமெனலாம்! யோசபாத்தின் ஜீவியம் கெட்ட சினேகத்தினால் குறுகிக்

குன்றிப் போயிற்று. 2 நாளாகமம் 18 : 1; 19: 2; 2 கொரிந்தியர் 6 : 14. தாவீதின் ஜீவியம் யோனத்தானுடைய சினேகத்தினால் கண்ணியமடைந்தது. நீ சினேகம் செய்வதிலும் தேவன் உன்னோடு இருக்க விரும்புகிறார். நீ எப்படிப்பட்ட சிநேகிதர்களைத் தெரிந்து கொள்ளுகிறாய் ?

உன் சரீரத்தை எதிர்த்து நின்று போராடு.

1 கொரிந்தியர் 9 : 27. முஷ்டி யுத்தத்தில் (குத்துச் சண்டை) பவுல் அப்போஸ்தலன் மிகத்தேர்ந்தவனாயிருந்தான். பிறருடனல்ல, தன்னுடனேயே! அவன் தன்னைத் தான் வெறுத்து ஜீவித்து, ஆத்துமீக ஜீவியத்துக்கு உகந்த சிட்சைகளுக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டு தன் சரீரத்தை நேராய் எதிர்த்துக் கடினமாக அடித்துப் போர்செய்துவந்தான். பேணி வளர்க்கப்படும் சரீரம் சோதனைக் காரனுக்கு வந்தனோபசாரங்கூறி வரவழைக்கும் அழைப்புப் பத்திரமேயாம். ஆத்துமீக அதிகாரத்தைப் பற்றி வைராக்கியமுடையவனாய் உன் சரீரத்தை அடக்கி ஆண்டுகொள். சிற்றின்ப சுகபோகாதிகள் உன் உடலின் வலிமையைக் கறந்துவிடும். எச்சரிக்கையாயிரு! ஆத்துமாவிலும் சரீரத்திலும் தகுதியுள்ளவனாயிருப்பதற்கு நிச்சயமான ஒரே வழி சீக்கிரமாய்ப்படுத்துறங்கிச் சீக்கிரமாய் எழுந்திருந்து, அந்தந்த நாளுக்குரிய அலுவல்கள் ஆரம்பிக்கு முன்னரே பரம பிதாவோடு தனித்து அமர்ந்திருத்தலேயாம்.

போர்க்களத்தின் நெருக்கடியில் எழும் ஐந்து எக்காள சத்தம் !

(1) நீ ஆண்பிள்ளையாயிரு! யோபு 38 : 3. போருக்கு கச்சை கட்டிக்கொண்டு சகலவிதமான கஷ்ட நஷ்டங்களையும் சகித்துக்கொள். ஜீவியம் முழுவதும் சர்க்கரைப் பந்தலில் தேன் மழை பெய்தாற்போலிருக்கும் என்று நினைத்துக் கொள்ளாதே. ஜீவியம் ஒரு பெரிய போர்க்களம். 2 தீமோத்தேயு 2 : 3.

(2) வெகுமதியைப் பெரும் பொருட்டு இன்னும் அதிகமாக மார்க்கு (**mark**) வாங்கு! வெளிப்படுத்தின விசேஷம் 2: 7, 10, 17, 25, 26; 3 : 5, 11, 12, 21; யாக்கோபு 1 : 12. இங்கே வாக்குத்தத்தஞ் செய்திருக்கிற வெகுமதிகள் யாவும் யுத்தக் களத்தில் வெகு மும்முரமாய் போர் நடக்கிற இடத்தில் அஞ்சாது நிற்கிறவனுக்கே உரியது.

(3) ஜெயத்தை எதிர்பார்! 1 யோவான் 4 : 4; 5 : 5. நீ செய்கிற போரில் உனக்கு சேனாபதியாயிருப்பவர், தலைவர்கள் யாவரினும் சிறந்த மகிமையின் இராஜா அல்லவோ? உன் போர் வாழ்க்கையில் உனக்கு இடைவிடாத இணைபிரியாத சேனா நாயகராய் விளங்குகிறவரும் அவரே. அவர் ஒரு பொழுதும் தமது ஆணை செலுத்துவதைவிட்டு ஒழிவதில்லை.

(4) உனக்குரிய நிலையை உறுதியாய்ப் பற்றி நில்! 1 பேதுரு 5 : 9. நீ நிற்கின்ற இடத்தில் நிகழ்வதையே காண்கின்றாய். நீ நிற்கின்ற இடத்தில் உனக்கு ஏற்படும் போர் மிகக் கஷ்டமாயிருக்கலாம். கிறிஸ்துவின் போர்வீரர் அடிமேல் அடியடிக்கப் பழகினவர்களாயிருக்க வேண்டும். நீ முன்னேறிக் கைப்பற்றின இடத்தை என்ன நஷ்டம் வந்தாலும் விடாதே. நீ இப்படிச் செய்வதினால் உன்னைப்போல மற்றோரிடத்தில் போர் செய்கின்ற உன் உடன் வீரனை முன்னேறி ஜெயம் பெறச் செய்கிறாய்.

(5) ஒருபோதும் மனஞ்சோராதே! 2 இராஜாக்கள் 6 : 16, 17; சங்கீதம் 34 : 7. உன் கண்ணுக்குப் புலப்படாத பெரும் பரமசேனைத்திரள் உனக்குத் துணை நிற்கிறதென்பதை நினைத்துக்கொள்; மனரம்மியமாயிரு; எத்தகைய திக்குமுக்காடச் செய்கிற நிலைமையிலும் அஞ்சாத நெஞ்சனாயிரு. நீ அடையப்போகிற அநேக ஆத்துமீக நிலைகளுக்கு இதுவே திறவுகோல்.

யுத்த ஆரம்பத்தில் மூன்று எக்காள சத்தம்!

(1) பகைவனை எதிர்த்துத் தாக்க வழிபார்! 1 கொரிந்தியர் 10 : 12. அடிக்கடி ஜெயத்திற்கு அடுத்தாற்போல தற்பெருமையும் தளர்ச்சியும்

ஏற்படுவதுண்டு. முடிவிலே பகைவனுக்கு உன்னை மேற்கொள்ளக் காலம் வாய்க்கிறது. பெருமையெனப்படுவது மாறுவேஷம் புனைந்து வரும் சாத்தானேயாம். ஜெயம்பெறும் பொழுதெல்லாம் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தி அவரையே நம்பித் தாழ்மையிலே அடங்கியிரு. நீதிமொழிகள் 28 : 14-ஓடு ஒப்பிட்டுப்பார்.

(2) விழுந்தாலும் எழுந்திரு! மீகா 7 : 8; 1 யோவான் 2 : 1, 2; சங்கீதம் 37 : 24. நீ விழும்பொழுதெல்லாம் உடனே தானே தேவனிடத்தில் மன்னிப்புக்காகத் திரும்பிவந்து, புதிதாகத் திரும்பவும் தொடங்குவாயானால் வீணாய்ப்போகாதபடி அநேக நாட்களை ஆதாயப்படுத்திக் கொள்ளலாம். நீ விழும்பொழுது தேவனுடைய இரக்கத்தை முற்றிலும் இழந்துவிட்டதாக நினைக்கிற சோதனை உனக்கு ஏற்படலாம். அப்பொழுது நீ முற்றிலும் நம்பிக்கை இழந்தவனாகாவிட்டாலும் பெரிய மனக்கலக்கமுடையவனாய்விடுவாய். யோவான் 6 : 37 பார். பின்பு வெளிப்படுத்தின விசேஷம் 12 : 11-இல் உள்ள இரகசியத்தை உறுதியாய்ப் பற்றிக்கொள். உன்னுடைய நித்திய சிநேகிதரிடம் உன் காரியங்களையெல்லாம் மறைக்காமல் சொல்லிவிடு. அவருடைய தலைமையின் கீழே, நீ இழந்த பிரதேசங்களை மறுபடியும் கைப்பற்றலாம்.

(3) இறந்தகாலத்தைப் பற்றிய சிந்தனைகளின் மத்தியில் வாழாதே! இறந்த காலத்தில்

நிகழ்ந்தது வெற்றியேயாயினும், தோல்வியேயா யினும் அவைகளைக் குறித்து எண்ணமிடாதே. தேவன் உன்னை மன்னிக்கும் பொழுது அவர் உன் இறந்தகாலத்தை முற்றிலும் மறக்கிறார். ஆகையால் நீயும் பின்னானவைகளை மறந்து முன் னானவைகளை நோக்கினவனாய் முன்னேறிச் செல். பிலிப்பியர் 3: 13, 14.

IX

வேத வாசிப்பு

சத்திய வேதம் தேவனுடைய வார்த்தைகளா?

யாத். 20 : 1 *யோவான் 17: 8, 14*
2 பேதுரு 1 : 21

சத்திய வேதத்திலுள்ள ஆத்துமீகச் செய்தி களை வியாக்கியானஞ்செய்து விளக்கிக் காட்டுகிறவர் யார்?

சங். 119 : 18 *யோவான் 16 : 13*
யோவான் 14 : 26 *1 யோ. 2 : 27*

மொழி அல்லது வார்த்தை எனப்படுவது ஒரு சிந்தனையின் வெளித்தோற்றமேயாம். சத்திய வேதம் 66-புத்தகங்கள் அடங்கிய ஒரு நூலா கும். பல வகையான குணபேதங்களும் மனப்

போக்குமுடைய 40-நூலாசிரியர்கள் அதின் புத்தகங்களை எழுதினார்கள். அவை ஒவ்வொன் றும் தனித்தனி நோக்கத்தோடு எழுதப்பெற் றவை. முற்றிலும் வித்தியாசமான வெவ்வேறு காலங்களில் இப்புத்தகங்களை எழுதினார்கள். அதிலுள்ள எல்லாப் புத்தகங்களும் 1500-வரு ஷங்கள் கொண்ட நீண்டதோர் காலத்தில் எழுதப் பெற்றவை.

சத்திய வேதத்தில் சரித்திரங்கள், ஜீவிய சரித் திரங்கள், பிரசங்கங்கள், நிருபங்கள், கவிதை கள், உவமைகள் முதலிய பலவகைப்பட்ட இலக் கியங்கள் அடங்கியிருக்கின்றன. இவைகளை எழுதினவர்கள் இயற்கை விதிகளுக்கு அப்பா லான விசேஷித்த தெய்வ ஏவுதலினால் எழுதி னார்கள். தேவன் அவர்களைக் கருவியாகக் கொண்டு தம்முடைய தன்மைகளையும், சித்தத் தையும் மனித ஜாதியாருக்கு வெளிப்படுத்தத் திருவுளங் கொண்டார். மற்றெல்லாவற்றிற் கும் மேலாக தேவகுமாரனும், உலக இரட்சக ரும், நம்முடைய ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய ஜீவிய சரித்திரமும், அவர் பாடுபட்டு மரணமடைந்த வரலாறும் அடங்கி யிருக்கிறது.

தேவனுடைய இருதயத்திலிருந்தும் மனத்தி லிருந்தும் வெளிப்படுகின்ற மகிமை தங்கிய பரி சுத்தமான சிந்தனைகளையும் மகா பரிசுத்தமான அன்பையும் நீ நாடோறும் வாசித்துத் தியானிக் கும் பொழுது உன் இருதயத்திற்குள்ளும்,

மனத்திற்குள்ளும், பரிசுத்த ஆவியானவருடைய உயிர்ப்புத் தோன்றும். ஏசாயா 55 : 8, 9 வாசி.

தேவ வசனம் உன்னில் கைகூடச் செய்கிறவைகள் எவை ?

1 பே. 1 : 23
யாக். 1 : 21
சங். 107 : 20
எபி. 4 : 12
சங். 19 : 7, 8
சங். 37 : 31
சங். 119 : 9, 11, 98, 130.
யோவான் 8 : 31, 32
யோவான் 15 : 3
யோவான் 17 : 17
1 பே. 2 : 2
சங். 1 : 2, 3
அப். 20 : 32
2 தீமோ. 3 : 15, 17

——

நீ தேவனுடைய வசனத்தை எப்படிக் கையாட வேண்டும் ?

மகா வாஞ்சையோடு அதன்மேல் தாகமாயிரு.

1 பே. 2 : 2 சங். 19 : 10
சங். 119 : 72, 97, 103, 127, 131, 167.

புத்தியுக்தியோடு ஆராய்ந்து பார்.

அப். 17 : 11, 12.

இரவும் பகலும் தியானமாயிரு.

சங். 1 : 2. சங். 119 : 15, 48, 97.
யோசுவா : 1 : 8

உடனே கீழ்ப்படி.

யாத். 24 : 3-8
எசேக். 33 : 30-33
மத். 7 : 24
யோவான் 7 : 17
யோசுவா 1 : 8
யாக். 1 : 22
யோவான் 14 : 15, 21a, 23a.
உபா. 11:26-28; 29: 29; 30 : 11-14

உபாகமம், 28-ம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிற செய்தியின் கருத்தைத் தெரிந்துகொள். "கீழ்ப்படிந்து நடப்பதை" மதிப்பதரிது.

மேற்கூறிய நாலு விதிகளும் ஆவியின் பூரண சுகநிலைமைக்கு நம்மை வழி நடத்துகிறது. எரே. 15 : 16; சங். 119 : 165.

119-ம் சங்கீதத்தை ஆராய்ந்து பார். மேற்கூறிய பொருள்களின் பேரில் வேறே வாக்கியங்கள் கண்டுபிடி.

கேள்விகள் :—

(1) தீபம், அக்கினி, சம்மட்டி, பட்டயம் இவைகளுக்குத் தேவ வசனத்தை ஒப்பிட்டுச் சொல்லும் வாக்கியங்களைக் கண்டுபிடி.

(2) தேவன் தம்முடைய வசனத்தை நமக்குக் கொடுத்ததின் சிறந்த நோக்கமென்ன ?

(3) வேதத்தைத் தியானத்தோடும், ஜெபத்தோடும் வாசிப்பதற்கு ஒவ்வொருநாளும் எவ்வளவு நேரம் செலவிடவேண்டுமென்று நீ நினைக்கிறாய் ?

————

X

ஜெபம்

ஜெபத்திற்கு ஆதாரம்.

ஆதி. 4 : 4ல் ஒரு மனிதன் ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கிறுன். ஆட்டுக்குட்டியின் இரத்தம் சிந்தியாயிற்று. அவனுடைய ஜெபத்தோடு பலியின் புகையும் கலந்து எழுகிறது. உன் ஜெபம் தேவனுக்கு அங்கிகாரமாயிருக்கும்படி நீ ஜெபிக்க முடிகிறதே; இது எதனுல் சாத்திய மாகிறது ?

இதற்கு விடை — லூக். 11 : 13-'பிதா'
எபி. 10 : 19-'இயேசுவின் இரத்தத்தால்'

என்பதில் காண்கிறது.

இலவசமாய் எல்லாரும் அவரிடத்தில் போக லாமென்று காட்டும்படியாக, இயேசு கல்வாரி யில் மரித்த மணிநேரத்தில் தேவாலயத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் தொங்கின கனமான திரை மேலிருந்து கீழ்வரைக்கும் இரண்டாய்க் கிழிந்தது. மத். 27 : 50, 51; எபி. 10 : 19, 20.

இந்தச் சிந்தனை உன் ஜெபத்தை வணக்கத் தோடும், ஸ்தோத்திரத்தோடும் தொடங்க உன்னை ஏவிவிடும். வெளி. 5 : 12, 13.

(1) அழைப்பு—
எரே. 33 : 3 மத். 7 : 7
யோவான் 16 : 24.

(2) தைரியப்படுத்தும் ஏதுக்கள்:

ஏசாயா 65 : 24 ரோ. 10 : 12, 13
மத். 6 : 8 எபே. 3 : 20, 21
மத். 7 : 8 எபி. 4 : 14-16

ஜெபத்தின் நோக்கம்:

(1) தேவனேடு உனக்கிருக்கிற ஐக்கியத்தை அதிகப்படுத்த.

ஆதி. 18 : 17-19 மத். 11 : 27
யாத். 33 : 11a யோவான் 17 : 25a
உபா. 34 : 10 லூக். 22 : 42

உன் பரமபிதா, தம்மோடு நீ பேசவேண்டு மென்று இயல்பாகவே விரும்புகிறுர்.

உன் மனது தேவனுடைய மனதோடு ஐக்கியப்பட்டிருக்கிறதினுல், உன்னுடைய சிந்தனைகளும் அவருடைய சிந்தனைகளைப் போலவே இருக்கும். அவர் பிரியங்கொள்ளுகிற காரியங்களிலேயே அநுதாபப்படுவாய். இவ்விதமாக அவருடைய மகிமைக்காகவே ஜெபிக்குந் தோறும் உன் இருதயம் விரிவாகும். கர்த்தருடைய ஜெபத்தை உண்மையாய்ச் சொல்லி ஜெபிக்கிறது லேசான காரியமல்ல. முதல் மூன்று விண்ணப்பங்களும் இவ்வுலகத்தில் அவருடைய பெரிய சித்தம் நிறைவேறும் பொருட்டு அவரோடு நீயும் ஐக்கியமாகி வேலை செய்ய உன்னையும் அழைக்கின்றன என்பதைக் கவனி. அவருடைய நாமம், அவருடைய

இராஜ்யம், அவருடைய சித்தத்திற்காக ஜெபித்த பிறகுதான் உனக்காகவும், மற்றவர்களுக்காகவும் நீ ஜெபிக்கிறாய்.

நீ அவரோடு ஐக்கியப்பட்டிருக்கிற அளவிற்கேற்பவே அந்த ஜெபத்தை உன் முழு இருதயத்தோடு ஜெபிக்கமுடியும்.

(2) உனக்காகவும் மற்றவர்களுக்காகவும் ஆசீர்வாதத்தைப் பெறும்படியாக.

(a) உனக்காக.

1 நாளா. 4 : 10	ஏசாயா 40 : 31
யாக். 1 : 5	லூக். 11 : 13

ஆண்டவ, நின்னடி அண்டி அமர்ந்து
வேண்டுநல் ஜெபத்து விளங்கிடு நேரம்
எத்துணை பாறுதல் இசைந்திடு மெமக்குள்!
எத்துணை பாரம் எமைவிட் டகலும்!
திரண்டெழு முகில்கள் திரள்மணி பொழிய
வறண்டுலர் மண்மகள் வளம்பெறல் போல,
வானவர் கோனே! வார்கழல் நண்ணி
மானவர் நாங்கள் மண்ணில் முழங்கால்
படிந்திட நின்று பணிந்திடும் பொழுதில்
படிந்திடும் அருள்மழை பரிவுட னெமக்குள்.
எழுந்திடும் பொழுதில், அண்மையும் சேய்மை
[யும்
பொழிந்திடு புனிதப் பேரொளி யதனில்
துலங்கிடும் வடிவுற; தோன்றிடும் உருவெழ.
பெலமே இல்லாப் பேதையர் நாங்கள்
நிலமேல் விழுந்து நின்னடி தொழுங்கால்
ஏய்ந்திடும் வலிமை என்னென் றுரைப்போம்!

ஆற்றலு மின்றி அழிவதும் நன்றோ?
காற்றினில் பட்ட கறங்கென நாங்கள்
கவலையிற் பட்டு கண்ணீர் சிந்தி
அவல மாக அவனியில் வாழ்ந்து
சாதலும் சரியோ? ஜெபமது மறந்து
ஓதரும் களிப்பும் ஒப்பிலா வலிமையும்
வீரமும் தீரமும் மிகுநல மணைத்தும்
ஏரெழில் உடையான் இணையடி தன்னில்
அமரும் ஜெபத்தா லடைவோ மெனவே.

(b) மற்றவர்களுக்காக.

ஆதி. 18 : 23—33	ரோ. 10: 1
1 சாமு. 12: 23	2 கொரி. 1 : 11
1 சாமு. 15: 11	எபே. 1 : 15—23
யோபு 42 : 10	எபே. 3 : 14—19
ஏசாயா 62 : 6, 7	பிலி. 1 : 3-6, 19
மத். 5 : 44, 45	2 தெச. 1 : 11, 12
லூக். 22 : 31, 32	1 தீமோ. 2 : 1

1 யோ. 5 : 16a

மற்றவர்களுக்காக வேண்டிக்கொள்ளுதல் தேவன் மனிதனுக்குக் கொடுத்த எல்லா வேலைகளிலும் மேலான வேலை. யாத். 32: 11-14, 30-32; எண். 14 : 11-20; உபா. 9 : 18-20, 25-29; 10 : 10; சங். 106 : 23; எசே. 22 : 30 ஒப்பிட்டுப்பார்.

உலகத்திலுள்ள பாவத்தையும் துயரத்தையும் நமக்கே உரிமை பாராட்டி அநுதாபப் படாததினால்தான் நாம் ஜெபிக்கத் தவறுகிறோம்.

யோவான் 17-ம் அதிகாரத்தைப் படித்துப் பார். கிறிஸ்து தம்முடைய பிதாவின் மகிமைக்காகவும் தமக்காகவும் (வ. 1-5), தம்மோடு ஐக்கியப்பட்டவர்களுக்காகவும் (வ. 6-19), எல்லா விசுவாசிகளுக்காகவும் (வ. 20-26) ஜெபிக்கிறுர்.

வேதாகமத்திலுள்ள பெரிய மனுஷருடைய ஜெபங்களைப் படித்துப்பார்.

2 சாமு. 7 : 18-29	2 இராஜா. 19: 14-19
1 நாளா. 29 : 10-19	எஸ்ரு 9 : 5-15
2 நாளா. 6 : 12-42	நெகே. 9 : 4-38
2 நாளா. 20 : 5-13	தானி. 9 : 3-19.

நேரம் செலவிட்டு இவைகளைப் படித்தாயானுல் உனக்குப் பேருதவியாயிருக்கும்.

ஜெபத்திற்குள்ள தடைகள்:

(1) ஜெபத்தினுல் பிரயோஜனமில்லை—(a) தேவன் சில திட்டமான பிரமாணங்களைக் கொண்டு இவ்வுலகத்தை ஆண்டு நடத்துகிறுர்; நமது ஜெபம் அவைகளை மாற்றவா போகிறது? ஜெபம் பண்ணினுல் நமது மனத்திற்குக் கொஞ்சம் நன்ருயிருக்கிறது. அதைத் தவிர வேறெரு பிரயோஜனமுமில்லை என்று சிலர் நினைக்கிறுர்கள். அவர் ஜெபத்திற்கு அதிக வல்லமை கொடுத்திருக்கிறுர் என்பதும் அகிலாண்டத்தையும் ஆண்டு நடத்துகிறதில் உன் ஜெபத்திற்கும் ஒரு பங்கு இருக்கத்தக்கதாக

காரியங்களை அதற்கேற்றபடி அமைத்திருக்கிறுர் என்பதுமல்லவோ உண்மை.

(b) தேவன் நல்லவர்; ஞானமுள்ளவர்; ஆதலால் ஜெபமின்றி யாவும் அமையும் என்று சொல்வது அறியாமையேயாகும். கிறிஸ்தவ ஜெபமாவது, நீ விரும்பியதை தேவனிடத்திலிருந்து பிச்சைக் கேட்டுவாங்குகிறதைப்போன்றதன்று; ஆனுல் அவர் விரும்பியதை உன்னிலே, உன் மூலமாய், உன்னேடு செய்ய அவருக்கு இடங்கொடுப்பதேயாம்.

மனிதன் தேவனேடு சேர்ந்து ஊழியஞ் செய்கிற மூன்று வகைகளில் முக்கியமானது ஜெபமே. வேலை செய்யவும், யோசிக்கவும், ஜெபிக்கவும், நீ அலட்சியம் செய்யும்போது அவர் தம் சித்தத்தை நிறைவேற்ருதபடி நீ தடுக்கிறுய்.

2. ஜெபத்தில் பிடி இல்லை. உன் எண்ணங்கள் அங்குமிங்கும் அலைந்தால், பின் குறிக்கப்பட்டவைகள் உனக்கு உதவியாயிருக்கும்.

(a) சரியாய்த் தொடங்கு! ஜெபம் பண்ணுமுன் ஒரு நிமிஷம் தாமதித்து இராஜாவின் சமுகத்தண்டை நீ போகப்போகிறதாகவும், பரலோகத்திலுள்ள அவருடைய சிம்மாசனத்தின் முன்னின்று முகமுகமாய் அவரோடு பேசப்போகிறதாகவும், அவர் உன் மன்ருட்டுகளைக் கேட்கப் போகிறதாகவுங் கருதிக்கொள்.

(b) அவர் உன் முன்னுக்கு இருக்கிறது போல் சத்தமாய் ஜெபி.

(c) முழங்காலில்தான் நின்று ஜெபிக்க வேண்டும் என்று நினையாதே, வெளி இடத்திலே, அமைதியான தனி இடங் கிடைத்தால் அங்கே ஜெபித்துப்பார். முழங்கால்படியிடு, நில், அல்லது நட; உனக்கு எந்த நிலை உதவியாயிருக்கிறதோ, அந் நிலையைத் தெரிந்துகொள்.

(d) ஜெபிக்கவேண்டிய விஷயங்களையும் பெயர்களையும் ஒரு ஜாபிதாவில் எழுதி வைத்துக்கொள்.

(e) உன் ஜெபத்தையே எழுதிக்கொண்டால் உனக்கு உதவியாயிருக்கும். அப்படிச் செய்தால் அந்த ஜெபங்களை அடிக்கடி மாற்றுவதோடு கூட்டவேண்டிய இடங்களில் கூட்டவும் வேண்டும்.

(f) ஜெபத்தைத் தொடங்குமுன் வேதம் வாசிப்பது உத்தமம். மற்றெந்தப் புஸ்தகமும் வேதத்தைபோல் ஜெபத்திற்கு உதவி செய்கிறதில்லை.

(g) எல்லாவற்றிற்கும் மேலாக, நீ நன்றாக இளைப்பாறி மனம் நன்றாயிருக்கும்போது ஜெபம் செய். நீ மெதுவாய்த்தான் தேர்ச்சியடையலாம். ஜெபம் பண்ணப் படிக்கிறதில் அநேகத் தடைகளை நீக்கவேண்டியிருக்கிறது. சில சமயங்களில் வானங்கள் வெண்கலத்தைப் போல் தோன்றுகிறது. ஆனால் அதையும் நீ

மேற்கொண்டு ஜெபிக்க வேண்டும். "வல்லமையான ஜெபத்தைபோல் கஷ்டமானது ஒன்றுமில்லை" என்று ஒருவர் சொல்கிறார்.

3. ஜெபத்திற்கு உத்தரவில்லை. தேவன் ஜெபத்திற்குத் தாமதம் செய்வதை மறுப்பு என்று நினைக்ககூடாது. அடிக்கடி அவருடைய நாமத்திற்கு மகிமையான விதத்தில் உத்தரவைக் காலாகாலத்தில் கொடுக்கும் பொருட்டு அவர் சில நிபந்தனைகளைப் புதிதாய் உண்டாக்க வேண்டியிருக்கிறது. தானியேல் 10 : 12, 13. அவர் கேட்டதைக் கொடாமலிருக்கும்போதும் அந்த மறுப்புகளைத் தங்கத்தில் பொதிந்து கொடுக்கிறார். நீ முட்டை என்று எண்ணிக் கேட்டாலும் அவர் உன்னை நேசிக்கிறதினால், நீ கேட்டது தேள் என்று அவருக்குத் தெரியுமாகையால் அவர் அதை உனக்குக் கொடுக்கமாட்டார். வெளிப் பார்வையான வல்லபங்களும் பேறுகளும் எப்போதும் உனக்கு நன்மையாயிரா. சில ஜெபங்களுக்கு உத்தரவு கிடைக்காதிருத்தலே உத்தமம். சங். 106 : 13-15. உன்னுடைய வார்த்தைகள் தெரிவிக்கிறதைவிட, அவருக்கு அதிகமாய்த் தெரியும். அவர் உன் இருதயத்தின் உள்ளான தேவைகளை அறிந்து, அதற்கேற்றபடி உத்தரவளிக்கிறார். 2 கொரி. 12 : 8, 9. பவுல் அப்போஸ்தலனின் துன்பத்தை நீக்காமல், அதைச் சகிக்கும்பெலனையே தேவன் அவனுக்குக்கொடுத்தார். நாம் தப்பிதமாய்க் கேட்டாலும் அவர் தப்பிதமாய்க் கொடுக்கவே மாட்டார்.

ஜெபத்தின் வல்லமை :

யாத். 8 : 12, 13, 30, 31	2 இராஜா. 20:11
யாத். 9: 29, 33	தானி. 2 : 17-19
யாத். 10 : 18, 19	தானி. 9 : 20-23
யாத். 17 : 9, 12	சங். 107 : 6, 13, 14, 28, 29
1 சாமு. 7 : 9—10	மாற்கு 9 : 29
1 இராஜா. 17 : 20—22	லூக். 9 : 29
1 இராஜா. 18 : 36—39	யோவான் 14:13, [14
1 இராஜா. 18 : 42—45	அப். 4 : 31
2 இராஜா. 4 : 32—35	அப். 9 : 40
2 இராஜா. 19 : 20	யாக். 5 : 13, 18

மனுஷர் கையில் ஒப்புவித்திருக்கிற எல்லா ஆயுதங்களிலும் மிக்க வல்லமையுடையது ஜெபமே. ஜெபம் நிலையான காரியங்களைச் சாதிக்கின்றது. விசுவாச ஜெபத்தினால் எல்லாம் ஆகும், (மாற்கு 9 : 23.) ஜெபிக்கும் போது தேவனுடைய இலக்ஷணத்தை நம்பு, 'அவரால் முடியும்' என்று நம்புவதன்று. 'அவர் செய்வார்' என்று நம்புவதே விசுவாசம். மத். 15 : 22—28; லூக். 7 : 2—10.

சங்கீதங்களில் ஜெபமாகிய நவநிதிக் குவைகள் புதையுண்டு கிடக்கின்றன. அவைகளைத் தோண்டி எடு.

ஜெபிக்க வேண்டிய விஷயங்கள்:

மத். 6 : 7, 9—13	யோவான் 14 : 13, 14
மத். 9 : 38	பிலி. 4 : 6
லூக். 11 : 13	1 தீமோ. 2 : 1, 2

ஜெபமே நம்முடைய ஜீவியத்தைத் தேவனோடு சம்பந்தப்படுத்துகிறது. நாம் ஜெபத்தின் மூலமாக, மானசீக உலகத்தையும் சட உலகத்தையும் தேவனோடு சம்பந்தப் படுத்தி அவரைப் போற்றித் துதிக்கிறோம்; நமது பாவங்களைச் சொல்லி, அறிக்கையிடுகிறோம்; நமது அவசியங்களைச் சொல்லி, மன்றாடுகிறோம்; மற்றவர்களின் அவசியங்களைச் சொல்லி, வேண்டிக் கொள்கிறோம்; நமது ஆசீர்வாதங்களைச் சொல்லி, அவரை நன்றிமிக்க உள்ளத்தோடு துதிக்கிறோம்.

உன் ஜெபங்கள் அகன்ற நோக்கமுடையதாயிருக்கட்டும். உன் ஜெபம் அநேகரைத் தனக்குள் அடக்கிக் கொள்ளுமாறு மண்டலமிட்டு விரியட்டும். பலருக்காகவும் பல காரியங்களுக்காகவும் ஜெபி. அகன்ற உலக முழுவதையும் இயேசுவுக்கே உரியதாக அவரடிப்படுத்த வேண்டும் என்ற மனக்காட்சி நிச்சயமாகவே உன் ஜெபத்திற்கு விசேஷ ஊக்கமளிக்குமன்றோ? ஜெபத்தில் தரித்திருக்கும்போது உலக முழுவதிற்கும் நீ ஒரு காரியத்தைச் செய்யலாம். மிகவும் சிறந்த சுவிசேஷப் பிரசார வேலையில் நீ ஜெபத்தின் மூலமாய் எவ்வளவு பெரிய ஊழியம் செய்யலாம் என்பதைச் சிந்தித்துப்பார்.

ஜெப இடம்:

மத். 6 : 6 1 தீமோ. 2 : 8

நமது இரட்சகருக்குப் பிரியமான ஓர் இடம் இருந்ததா? பலஸ்தீன முழுவதும் அவர் ஜெபித்த இடங்களால் நிறைந்திருக்கிறது.

ஜெப நேரம்:

சங். 5 : 3 தானி. 6 : 10
1 தெச. 5 : 17

நமது இரட்சகருக்கு ஜெபிக்கிறதற்கென்று குறித்த நேரங்களிருந்தனவா?

லூக். 3 : 21	லூக். 11 : 1
மாற்கு 1 : 35	யோவான் 11 : 41
லூக். 5 : 16	யோவான் 12 : 27, 28
லூக். 6 : 12	லூக். 22 : 32
மாற்கு 6 : 46	யோவான் 17
லூக். 9 : 18, 29	மாற்கு 14 : 32—42
லூக். 10 : 21	லூக். 23 : 34, 46

பதினைந்து சமயங்களில் அவர் ஜெபித்ததாக வாசிக்கிறோம். இந்த ஜெப சமயங்களை அவைகளுக்குக் காரணமாயிருந்து அவைகளைத் தோன்றச் செய்த சந்தர்ப்பங்களை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ந்து பார்.

"ஜெபம்" என்று ஒன்றுண்டு; 'ஜெபங்கள்' என்றும் உண்டு. இவைகள் ஒன்றையொன்று

சார்ந்திருக்கிறது. உன் ஜீவியம் தொடரான பெரிய ஜெபமாயிருக்கத் தேவன் விரும்புகிறார். ஆனால் திட்டமாய் ஜெபிக்க உனக்குக் குறித்த நேரமொன்று இல்லாவிட்டால், தேவனின் விருப்பத்தை நீ நிறைவேற்ற முடியாது.

ஒரு மனுஷன் தன் நாடோடிய ஜீவியத்தின் நுட்பமான காரியங்களைப் பற்றிக்கூட தேவனிடத்தில் பேசப் பழகின பிற்பாடு இயற்கையாகவே சிறுசிறு ஜெபங்கள் அவன் வாயிலிருந்து வருகிறது.

சிறுசிறு ஜெபங்கள் :—2 சாமு. 15:31; 2 இரா. 6 : 17; நெகே. 2 : 4; லூக். 10 : 21.

ஜெபத்தின் தடைகள்:

சங். 66 : 18 ஏசா. 59 : 1, 2
ஏசா. 1 : 15 எசே. 14 : 3
யாக். 4 : 3

ஜெய ஜீவியத்தின் நிபந்தனைகள்:

2 நாளா. 7 : 14.	மத். 6: 14, 15.
சங். 145: 18, 19.	மத். 18: 19, 20.
ஏசா. 58: 6—9.	லூக். 11: 5—10.
மல். 3: 10.	லூக். 18: 1—8.
மாற்கு 11: 24, 25.	யோவான் 14: 13, 14.
யாக். 1: 6, 7.	யோ. 16: 23, 24.
எபி. 11: 6.	1 யோ. 5: 14.

யாக். 4:2 யோவான் 5 : 7, 16
மத். 5: 23, 24 1 யோ. 3 : 22

ஐந்து ஜெப விதிகள்:

1. அவசரப்படாதே! சங்கீதப்பயிற்சியடைய எவ்வளவு காலமாகுமோ அவ்வளவு காலம் ஜெபத்தில் தேர்ச்சியடையவும் தேவையாயிருக்கும்.

2. பரிசுத்த ஆவியானவருடைய உதவியை எதிர் பார்! ரோ. 8: 21; யூதா. 20.

3. உன் அவசியத்தை அறி! அதற்காக ஜெபி.

4. உத்தரவுக்காக எதிர்பார்!

5. விடாமுயற்சியாய் ஜெபத்தில் நிலைத்து நில்! கொலோ. 4:2. ஜெபம் ஒருவனுடைய ஜீவியத்தில் மிகப் பெரிய அலுவல். தேவனுடைய ராஜ்யத்தின் ஐசுவரிய இரகசியங்களை அறிய விரும்புவாயானால் உன்னையே ஜெபத்திற்கு ஒப்புக்கொடு.

மகாத்துமாக்கள் தாங்கள் அடைந்திருக்கின்ற உன்னத நிலைகளை ஒரே அடியில் அடையவில்லை. பரிசுத்த ஜீவியத்தில் பிரவேசித்த மற்றனைவரும் அயர்ந்துறங்குகையில் இவர்கள் மட்டும் அரும்பாடுபட்டுக் குன்றாத முயற்சியோடு படிப்படியாய் ஏறினார்கள்.

XI.

சாட்சி

சாட்சி சொல்ல அழைப்பு.

ஏசா. 43 : 10—12 லூக். 24 : 46—18
யோ. 15 : 27 அப். 1 : 8
மத். 28 : 18—20 அப். 23 : 11
மாற்கு 16 : 15 அப். 26 : 16, 19
சங். 40 : 9, 10; 107 : 1, 2; 145 : 6, 7, 11, 12 ஒப்பிட்டார்.

சுவிசேஷ பிரசாரத்திற்கு உற்சாகமில்லாத ஒரு சபையைக் "கிறிஸ்தவ" சபையெனல் முரணாகும். இவ்வுலகமெங்கும் சுவிசேஷம் பரவுதற்கு தேவன் தம்முடைய ஜனங்களின் மெய்யான சாட்சியையே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். இரட்சகரும் தம்முடைய இரட்சிப்பை அனுபவத்திலே ருசித்து அறிந்தவர்கள் யாவரும் அந்நற்செய்தியை இவ்வுலகமெங்கும் பரவச் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறார். இவ்வுலகிலுள்ள மக்களனைவரிடத்திலும் தம்மைப் பற்றிப் பேசி நானாதேசத்தாரையும் தம்முடைய திருவடியின் கீழ்கொண்டு வருகின்ற சிறந்த சுவிசேஷ ஊழியத்தை அவர் தம்முடைய அடியார்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்.

சுவிசேஷ வாஞ்சை உள்ளத்தில் இல்லாமல் இயேசுகிறிஸ்துவின் எந்த சீஷனும் ஆவிக்

குரிய ஜீவியத்தில் முன்னேறவே முடியாது. அன்றியும் பிறனொருவனிடத்து இயேசுவைப் பிரசங்கித்தல் கிறிஸ்தவ ஊழியக்காரனுக்கே விசேஷித்த வல்லமை அளிப்பதாயிருக்கிறது. ரோமர் 10 : 9, 10, வசனங்களின்படி இச் செய்கை ஒவ்வொருவருடைய இரட்சிப்பின் விசேஷித்த அம்சமாகவும் இருக்கிறது. எல்லாருக்கும் முன்பாகச் சாட்சி சொல்லும் பொருட்டு ஒரு கோழை ஸ்திரீயையும் நமது இரட்சகர் வற்புறுத்தியிருப்பதின் நோக்கம் ஒருவாறு விளங்குகிறது. லூக்கா 8 : 47 பார்க்கவும்.

உன்னுடைய மீட்பரும் ராஜாவுமாகிய அவருடைய நாமத்திற்கு மகிமையாகச் சாட்சி சொல்ல எவ்வளவிற்குப் பின் வாங்குகிறாயோ அவ்வளவிற்கு உன் ஆத்துமீக ஜீவியமும் வலி குன்றிப் பயனற்றதாகும். தேவனுடைய இராஜரீக ஆட்சிக்கு அடங்கினவர்கள் என்று யாவருக்கும் வெளிப்படுத்துகிற ஓய்வுநாள் ஆசரிப்பு, குடும்ப ஜெபம், சாப்பிடுமுன் சிறு ஜெபம் முதலியவைகள்கூட இல்லாதபோது உன் ஜீவியம் எவ்வளவு குறைவு பட்டதென்று தெளிவாகி விடுகிறது.

ஒரு சாட்சியின் சிலாக்கியமும் கடமையும்:

1 இரா. 22 : 13, 14	மாற்கு 13 : 9, 10
சங். 66 : 16	யோவான் 3 : 11
எரே. 1 : 7, 17	அப். 4. 20
எசே. 2 : 3-7	சங். 45 : 1 ஒப்பிடு

எசே. 3 : 4, 7, 10, 11, 17, 19	1 யோ. 1 : 1-3
	அப். 22 : 14, 15
யோனா 3 : 2	அப். 26 : 17, 18
2 கொரி. 5 : 18—20	

தேவனுடைய செய்தியைச் சொல்ல உயர்ந்தோர் தாழ்ந்தோர் யாவருக்கு முன்பாக என்ன வந்தாலும் வரட்டுமென்று மகாதைரியமாய் நிற்பது விசேஷித்த சிலாக்கியமும் கடமையுமேயாம்.

பழைய தீர்க்கதரிசிகளின் காலத்தில் (1 இராஜா. 18 : 21 ஒப்பிட்டுப்பார்) தேவன் தம்முடைய ஊழியக்காரரைத் தங்கள் சொந்த தேசத்திற்கு விரோதமாகவேனும், வேறு தேசங்களுக்கு விரோதமாகவேனும், சில ஜாதியாருக்கு எதிராகவேனும், சில தப்பறையான பழக்க வழக்கங்களுக்கு எதிராகவேனும் பேச அழைத்தார். அப்படியே இந்நாட்களிலும் மனிதர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகள் தேவனிடமில்லையோ? அல்லது, அஞ்சாத உண்மையுள்ள சாட்சிகள் இல்லாமற்போய்விட்டார்களோ?

தமது சீஷர்கள் எந்த இடத்தில் முதலாவது சாட்சிகளாயிருக்க வேண்டுமென்று நம்முடைய ஆண்டவர் சொல்லியிருந்தார்? அப். 1 : 8; லூக். 8 : 38, 39 பார்க்கவும். நமது இரட்சகர் முப்பது வருஷம் சொந்த வீட்டில் அமைதலாகவெனினும் மகா வல்லமையோடு சாட்சியாயி

ருந்த பிறகுதான் தேவன் தம்முடைய குமாரனாகிய அவரிடம் தமக்குள்ள ஒப்புயர்வற்ற பிரியத்தை வெளியிட்டு அவரை மிகப் பெரிய ஊழியத்திற்கு அழைத்தார். வார்த்தையாலும் எழுத்தாலும் கொடுக்கப்படுகிற வல்லமையான சாட்சிக்கு இசைந்த ஜீவியம் அஸ்திபாரமாயிருப்பது மிகவும் அவசியம்.

உப்பும், வெளிச்சமும் தத்தம் தன்மைகளை அமைதியாய்ச் செல்லவைக்கின்றன. உன் ஜீவியத்தின் அமைதலான செல்வாக்கு கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுகிறதா? நீதிமொழிகள் 11 : 30-ஐ வாசித்துப் பார்; அதோடு யாக்கோபு 1 : 5; 3 : 17-ஐ ஒப்பிட்டுப்பார்.

அப்போஸ்தலர் நடபடிகளின் புஸ்தகத்தை 2-ம் அதிகாரம் 41-ம் வசனத்திலிருந்து வாசித்து ஆராய்ந்து உண்மையான சாட்சிக்குக் கிடைக்கும் விலையேறப்பெற்ற வெகுமதி இன்னதென்று அறிந்துகொள். அதோடு யோவான் 10 : 41, 42; நீதிமொழிகள் 14 : 25 a; தானியேல் 12 : 3; மத்தேயு 10 : 32; நீதிமொழிகள் 11; 24, 25 வாசித்துப்பார்.

சாட்சி சொல்ல வல்லமை:

மோசே தனக்கு வல்லமையில்லை என்று உணர்ந்தான். யாக். 3 : 11, 13; 4 : 1, 10; 6: 12, 30.

தேவனின் மறுமொழி : யாத். 4 : 11, 12.

எரேமியா தனக்கு வல்மையில்லை என்று உணர்ந்தான். எரே. 1 : 6.

தேவனின் மறுமொழி — எரே. 1 : 7—10, 17—19; 1 பேதுரு 4 : 11.

தேவன் பெந்தெகொஸ்தே நாளுக்குமுன் எல்லா மனிதருக்கும் வல்லமை அருளவில்லை. அன்றுதான் ஆவியானவர் தைரியத்தையும் சகோதர அன்பையும் சம்பூரணமாய்த் தம்மோடு கொண்டுவந்தார். அப்போஸ்தலர் தைரியமாய் அவருக்காகச் சாட்சியாய் நின்றதற்குக் காரணம் இதுவே. அப். 1 : 8; 2 : 14; 4 : 13; 29, 31, 33 ; 5 : 29, 41, 42; 7 : 51—53; 9 : 27; 14 : 3; 19 : 8; 28 : 30, 31; தானியேல் 3 : 17, 18.

அதற்குப் பிறகு ஆவியானவரின் வல்லமையினால் அவரோடு கூடச் சேர்ந்து உடன் ஊழியர்களாய் சாட்சி சொல்வது மட்டுமே அவர்கள் கடமையாயிருந்தது.

யோவான் 15 : 26, 27 அப். 15 : 28
அப். 5 : 31, 32 எபி. 2 : 3, 4
அப். 14 : 27 2 கொரி. 6 : 1
மாற்கு 13 : 11

யோவான் 15 : 1—8; 2 பேதுரு 1 : 5—8; யாக்கோபு 2 : 14—26; 3 : 2—18; பிலி. 1 : 9—11; மத். 7 : 16—21.

திராட்சைச் செடியானது கொடிகளில்லாமல் கனி தருமா?

செடியும் கொடியும்ஒன்றுக்கொன்று இன்றியமையாதவை.

இரண்டு பூரண சாட்சிகள் :

1. குமாரன். யோ. 12 : 45, 14 : 9.
2. ஆவியானவர். யோ. 15 : 26; 16 : 14.

அவருடைய ஆளத்துவத்தை வெளிப்படுத்தலே பூரணசாட்சியாம்; கிறிஸ்துவைக் காணுதலே பிதாவைக் காணுதலாம். அவருடைய வார்த்தைகளும் (யோவான் 7 : 46), அவருடைய கிரியைகளும் (யோவான் 5 : 36) சுருக்கமாக—அவருடைய முழு இலக்ஷணமும் இன்னொருவருடைய(பிதாவுடைய) தற்சொரூபமாயிருக்கிறது.

இதோடு எண்ணாகமம் 2-ம் அதிகாரத்தில் மோசே தேவனுடைய குணாதிசயத்தை வெளிப்படுத்தத் தவறினதைப்பற்றிச் சொல்லியிருக்கிறதை ஒப்பிட்டுப்பார். அவனுடைய பாவம் எதிலிருக்கிறது? அவனுடைய கீழ்ப்படியாமை மிகவும் பயங்கரமான விளைவுக்குக் காரணமாயிருந்தது என்பதிலல்லவோ? அவன் தேவனுடைய பிரதிநிதியாக ஜனங்களுக்கு முன் நின்றான். அந்த ஜனங்கள் தேவனைப்பற்றி அறிந்த அறிவு முழுவதும் மோசேக்குச் செவி கொடுத்து அவனை நோக்கிப் பார்த்ததினாலேயே கிடைத்ததாகும். ஆகையால், தேவன் மோசேயைத் தக்கவாறு தண்டித்திராவிட்டால் அந்த ஜனங்கள் தேவனுடைய இலக்ஷணத்தைப்பற்றி எப்படிப்பட்ட

அபிப்பிராயமுடையவர்களாகயிருந்திருப்பார்கள்?

அவன் தன்னுடைய பொறுமையற்ற துடுக்கான நடத்தையினால் திரளான ஜனங்களுக்குத் தேவனைத் தப்பிதமாய்க் காட்டினான்.

தேவன் பின்னொரு தருணத்திலும், தமது ஜனங்கள் பாவஞ்செய்தபோதிலும் தம்முடைய அளவற்ற அன்பாலும் நீடிய பொறுமையாலும் அவர்களைச் சந்திக்க விரும்புகிறார்; இந்த விதமாக அவர்களைத் தம்மோடு சேர்த்துக் கட்டுகிற அன்பின் சங்கிலியில் பின்னுமொரு வளையத்தை அடித்தமைக்க முயலுகிறார். (யாத். 34 : 6, 7; சங். 130 : 4; எரே. 31 : 3; ஓசியா 11 : 4.) ஆனால் அந்த நாளில் அவர் தம்மை மற்றவர்களுக்குக் காட்டும்படித் தெரிந்துகொண்டவன், அன்று முற்றிலும் பிரயோஜனமற்றவனாயிருந்தான்.

அறிவிக்கிற செய்தியைவிட, என்ன ஆவியோடு அந்தச் செய்தி அறிவிக்கப்படுகிறது என்பதுதான் முக்கியம். ஆகையினால் நமதாண்டவரோடு ஐக்கியப்பட்டு உறவாடி அவருடைய ஆவியை ஏராளமாய்ப் பெற்றுக்கொள்வது எவ்வளவு அவசியமானது? மாற்கு 3 : 14.

கேள்விகள் :

1. ஆத்தும ஆதாயம் பண்ணுவது உன் பேராவலா? இல்லாவிடின் இந்தச் சிறு புஸ்தகத்தை நீ படிப்பது வீண்.

2. நீ தைரியமாய், எல்லாருக்கும் அன்பாக கிறிஸ்துவை அறிக்கையிட்டிருக்கிறாயா? நீ அவருடைய சீஷர்களில் ஒருவன் என்று யாருக்குத் தெரியும்? யோ. 12 : 42, 43; மத். 10 : 32, 33; லூக். 9 : 26.

3. நீ எங்கே சாட்சி சொல்ல வேண்டுமென்று நம்முடைய ஆண்டவர் விரும்புகிறார்? பசியினால் வருந்திக் கதறுகிற கோடிக்கணக்கான ஜனங்களின் சத்தத்தை நீ கேட்டதுண்டா? கேட்டபோது அதைக்குறித்துச் சிந்தித்து, நீ பாளயத்தில் இருப்பது அவருக்கு இஷ்டமோ அல்லது போர் முனையில் நிற்பது அவருக்கு விருப்பமோ என்று அவரிடத்தில் யோசனை கேட்டதுண்டா?

பவுல் அப்போஸ்தலனுக்குத் தன்னுடைய ஜீவிய வேலையின் விஷயமாக ஏற்பட்ட உள்ளான வெளிப்படுத்தலின் முக்கியத்தைப் பற்றி யாதொரு சந்தேகமுமிருக்கவில்லை. கலா. 1 : 15, 16.

XII

ஊழியமும் உபத்திரவமும்

ஆவிக்குரிய ஜீவியம் கிரியையில் வெளிப்படவேண்டும். வரத்துக்கால் பாய்ச்சலுக்கேற்ப மறுகால்ப் பாய்ச்சலும் மதகு வாய்ப் பாய்ச்சலுமிருக்காவிட்டால் ஏற்படும் முடிவு தேக்கலும் நாற்றமுமே.

கிறிஸ்துவின் மேல் வைக்கிற உயிருள்ள விசுவாசம் எப்பொழுதும் நவமாயும் ஊக்கமுடையதாயுமிருக்க வேண்டுமாயின் பொறுமையோடு உபத்திரவங்களைச் சகித்துக்கொண்டு ஊழியஞ் செய்வதிலேயே அது வெளிப்படவேண்டும்.

எடுத்துக் காட்டுந்தோற்றமுடைய மொரேவிய தேவாலயத்தின் கோபுரத்தின் ஒரு புறத்தில் ஓர் எருதும் கலப்பையும் செதுக்கிய சிற்பச் சிலை காணப்படுகிறது. மறுபுறத்தில் ஒரு பலிபீடம் செதுக்கியிருக்கிறது. அவைகளின் கீழ் ''எதற்கும் ஆயத்தம்'' என்ற வார்த்தைகள் காணப்படுகின்றன.

A. ஊழியம்

உன் இராஜாவிற்கும் தேசத்திற்கும் உள்ள தேவை நீயே :

ஏசாயா 58 : 6, 7   மத். 25 : 34, 4: 9
லூக். 4 : 18   அப். 22 : 34, 35

இவ்வுலகம் பாவத்தினால் விளைந்த அனுவசியமான வேதனைகளாலும், வாழ்க்கை நிலைகளாலும் நிறைந்து போயிருக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாம் நேசிக்கிற இவ்வுலகத்திலுள்ள வீடுகளிலும் நகரங்களிலும் ஒளியைத் தந்து இருளைப் போக்கத் தமக்கு உதவி செய்யுமாறு உன்னை அழைக்கிறார். நீ அவருக்கு மிகவும் அவசியமாயிருக்கிறாய். ஒடுக்கப்பட்டவர்களின் சார்பில் நின்று போராடவும், அறிவீனரோடு தோழமை

கொண்டு அன்னவர்களுக்கு அறிவு புகட்டவும், பிணியாளிகளைக் குணமாக்கவும், பெலவீனருடைய பாரத்தைத் தாங்கவும், அவர் உன்னை அழைக்கிறார்.

கிறிஸ்தவ ஊழியத்தின் பொன் மொழிகளில் ஒன்று "தாழ்ந்து மெலிந்தோர் தழைத்தோங்கல்" என்பதே. கிறிஸ்தவ தீர இலட்சணத்தைப் பயிற்சி செய்வதற்கு உன்னைச் சூழ்ந்த உலகமே உற்றதோர் இடம்.

ஆயினும் பரம இராஜன் பலவந்தமாய் எவனையும் தம் படையில் சேர்ப்பதில்லை. அவர் படையில் ஒன்று இலவசமாய் வலுவில்வந்து சேரவேண்டும்; இன்றேல் சேரவே முடியாது. சங்கீதம் 40 : 6, 7, 8; யாத்திராகமம் 21 : 5, 6; 35 : 21—36; 7; 1 நாளாகமம் 12 : 18, 38; 29 : 6—17; 2 கொரிந்தியர் 8 : 5; 9 : 7 ஒப்பிட்டுப்பார்.

மனுஷ சகோதரத்துவத்திலே பரஸ்பர சேவையென்னும் பொறுப்பு பிரதானமானது. எண்ணாகமம் 32 : 6—18 பார்க்கவும். இப்பொறுப்பைப் புறக்கணிக்கிறவர்களுக்கு ஏற்படும் தண்டனையை 23-ம் வசனத்தில் கவனி.

பரம இராஜன் உன் வசத்தில் ஏதோ சில தாலந்துகளையும், வல்லபங்களையும் ஒப்படைத்திருக்கிறார். நீ அவைகளைப் பிறருக்குச் செய்கிற ஊழியத்தில் உபயோகித்து வாணிபஞ் செய்து அவர் பொருட்டு ஆதாயந்தேட வேண்டுமென்பதே உன் ஆண்டவருடைய நோக்கமாயிருக்கிறது, லூக்கா 19 : 12 — 26;

மத்தேயு 25 : 14—30. எவனுக்கு அதிகக் குறைவாகத் தாலந்து கொடுக்கப்பட்டதோ அவனே ஒன்றுஞ் செய்யாமலிருந்தான். சிறியது சிறியதே, எனினும் சிறியதிலும் உண்மையாயிருக்க அது பெரியதாகும். 1 கொரிந்தியர் 4 : 2; 1 பேதுரு 4 : 10 ஒப்பிட்டுப்பார்.

ஊழியத்தின் மாதிரியும் இயல்பும்.

மிகவும் சுறுசுறுப்பாய் ஊழியஞ் செய்தல் என்று ஒன்றுண்டு. இது தேவனுடைய பார்வையில் ஒன்றுக்குமுதவாதது; ஏற்பாடுகள், ஸ்தாபனங்கள், சங்கங்கள், நிர்வாகக் கூட்டங்கள் முதலிய சக்கரங்கள் இந் நாட்களில் வெகு வேகமாய்ச் சுழல்கின்றன. ஆனால் இத்தகைய சக்கரங்களில் ஜீவ ஆவியில்லை. எசேக்கியேல் 1 : 20, 21 ஒப்பிட்டுப்பார். இத்தகைய ஊழியத்தினால் முறுமுறுப்பும் கறுகறுப்பும் அமளிகொமளியும் அதிகரிக்குமேயன்றி பயனான காரியமொன்றும் நடைபெறாது.

உன்னுடைய செய்கைகள் யாவும் நீ கொண்ட நோக்கத்தை நிதானித்துத்தான் மதிப்பிடப்படும். உன் செய்கையின் மிகுதியைப் பார்க்கிலும் தகுதியே பிரதானம். 1 கொரிந்தியர் 3 : 11—15, அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று பரத்திலிருந்து வருகிற அக்கினியானது பரிசோதிக்கப்போகிற நாள் வருகிறது. நீ எவ்விதமான

மனப்பாங்கோடு ஊழியஞ் செய்கிறுயோ அதற்கேற்ப உன் ஊழியத்தின் பலனும் அமையும்.

1. அன்பின் தேவை :

மத். 22 : 37—39
கலா. 5 : 6, 13, 14
லூக். 10 : 33—35
யோவான் 13 : 34, 35

1 யோவான் 2 : 9, 10; 3 : 10, 11, 14-18, 23; 4: 7, 8, 11, 12, 19—21; ரோமர் 12: 10; 13 : 8.

பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் சீஷர்களுடைய ஊழியத்தில் அன்பும் தாழ்மையும் மிகவும் பரிதபிக்கத் தக்கவாறு குறைவு பட்டிருந்தது. மத்தேயு 14: 15, 16; 15: 23; மாற்கு 9 : 33, 34; 10 : 13, 35—37, 41. அவர்களுக்குச் சிறு பிள்ளைகளிடத்தில் அன்பில்லை; பரஸ்பர அன்பில்லை; தங்களைச் சூழவிருந்த ஆத்துமாக்களிடத்திலும் அன்பில்லை.

ஆண்டவர் ஊழியஞ் செய்கிற நேரத்தில் அவரைக் கவனி.

மாற்கு 1 : 41
மத். 9 : 36

மாற்கு 6 : 34; மத். 14 : 14 ஒப்பிட்டுப்பார்.
மாற்கு 8 : 2, 10 : 13—16; 10 : 21; லூக். 13 : 34;

மாற்கு 5 : 30; லூக். 8 : 46; 6 : 19 ஒப்பிட்டுப்பார்.

அவர் தம்முடைய சொந்த ஒழுங்குகளையும் சௌகரியங்களையும் விலக்கிவிட்டுத் தடைகளைச் சகித்துக் கொள்கையில் மிகப் பெரிய பரித்தியாகத்திற்கு அவரை ஏவின விரைவான இரக்கத்தைக் கவனியுங்கள்.

கிறிஸ்துவின் அன்பு ஜாதிகுலப் பிறப்பெனும் சுவர்களனைத்தையும் தாவிச் செல்கின்றது. இந்த அன்பு மனுஷஜீவிய சம்பந்தமாக விடுக்க முடியாத வினுக்களேயில்லை.

1 கொரிந்தியர் 13 : 3—7.

மகாவைத்தியர் ஒருவனைச் சொஸ்தப்படுத்தின போதெல்லாம் பெரிய கிரயம் கொடுக்க வேண்டியதாயிருந்தது. ஆயினும் அவருடைய தற்காலத்து நஷ்டம் குணமானவர்களுக்கு நித்திய லாபமாயிற்று. அவர் ஏனோ தானோ வென்று ஒருவனையும் குணமாக்கவில்லை; வெறும் வார்த்தைகளினுல் மட்டும் ஒருவனைக் குணமாக்கவுமில்லை. சாதாரண ஜீவியத்தில் மிகவும் பயன்படக்கூடிய முறையில் அவர் தம்முடைய அன்பை வெளிப்படுத்தினுர். அவருக்குத் தம்முடைய பிதாவினிடத்திலும் மனிதர் பாலுமிருந்த அன்பே ஜீவனையும் கொடுக்க அவரைத் தூண்டிற்று. அவர் சீஷர்களுக்குத் தமது ஜீவிய சாதனையினுலும் போதனையினுலும் விளக்கப்பெற்ற புதிய கற்பனையில் மிகவும் உயர்வான ஜீவிய அளவுகோலை அவர்களுக்குக் கொடுத்திருந்தார். லூக்கா 15-ம் அதிகாரத்தில்

காணப்படுகிற உவமைகளில் தேசாந்திரியையும் தன்னிஷ்டப்படி விட்டுவிடாத மிகப்பெரிய ஓர் அன்பைப் படமெழுதிக் காட்டியிருக்கிறது.

2. தாழ்மையின் தேவை

மத். 11 : 28—30; யோவான் 13 : 3, 4—14
மாற்கு 10 : 42—45; பிலி. 2 : 5—8
லூக். 22 : 27 1 பேதுரு 5 : 5

தீமையைச் சரிக்கட்டுவதற்காக மோசே அந்தஸ்தையும் தாலந்தையும் புயபெலத்தையும் உபயோகிக்க மிகவும் ஆவலாயிருந்தான்; எனினும் தற்பெருமையுள்ளவனும் அனுபவமில்லாதவனுமாயிருந்தான். இது தப்பான வழியிலே சென்ற உற்சாகமேயன்றி மற்றன்று. யாத்திராகமம் 2 : 11—14; அப்போஸ்தவர் 7 : 22—25 பார்க்கவும். ஜாதிப் பெருமை, ஸ்தானப் பெருமை, முக அழகுப் பெருமை, கிருபைப் பெருமை, முதலிய சகல பெருமைகளும் சிலுவையினடியில் அடிபட்டுச் செத்தொழிகின்றது. இப் பிரபஞ்சத்திலுள்ள எந்த மகோன்னத ஸ்தானமும் நித்திய உரிமையால் கிறிஸ்துவுக்கே சொந்தமானதாயினும் அவர் அதை விரும்பவில்லை. விழுந்துபோன மனுஷஜாதிக்கு ஊழியஞ் செய்து அவர்களைத் திரும்பவும் மகிமைக்கும் தேவனிடத்திற்கும் கொண்டு வரும் பொருட்டாக அவர் மிகவும் மகோன்னத நிலையை விட்டுத் தம்மைப் பாதாள மட்டுந் தாழ்த்த வேண்டியதாயிற்று.

உன் எல்லா ஊழியத்திலும் சிலுவையின் ஞானார்த்தம் விளங்கும்படி ஜெபி. தன் கண்ணியத்தைக் காக்க விரும்புகிறவனை விடக் கிறிஸ்துவினிமித்தம் தன்னை மூடனென்று பிறர் எண்ணிக் கொண்டாலும் எண்ணிக்கொள்ளட்டுமென்று இருக்கிறவன் ஆத்துமாக்களை அதிகமாய் ஆதாயம் பண்ணக்கூடிய நிலையிலிருக்கிறான். மாற்கு 3 : 21; அப்போஸ்தலர் 26 : 24; 2 கொரிந்தியர் 5 : 13, 14a. கிறிஸ்துவின் அன்பு உன்னைச் சுற்றிக் கட்டியிருக்கும்பொழுது உன்னைப்பற்றி உலகமென்ன நினைக்கிறதென்றும், என்ன சொல்லுகிறதென்றும் நீ கவனிக்கிறதேயில்லை.

நம்முடைய ஆண்டவர் அடிக்கடி பழக்கவழக்கங்களை எதிர்த்து நின்றே காரியங்களைச் செய்திருக்கிறார். (உதாரணமாக மாற்கு 2 : 16, 23, 27). அவருடைய ஊழியக்காரரும் அவருடைய இராஜ்யத்துக்காக ஏதாவது செய்து முடிக்கவேண்டுமானால் இவ்வுலகத்தின் வழக்கத்தைத் தாழ்ந்த சிந்தையோடு மீறி நடக்க வேண்டும். அன்பின் சகல கிரியைகளுக்கும் தாழ்மை முற்றிலும் இடங்கொடுக்கிறது. 1 கொரிந்தியர் 9 : 19, 22, 23.

3. விசுவாசத்தின் தேவை

மாற்கு 2 : 1—12; லூக்கா 5 : 18—26-ல் சொல்லியிருக்கிற ஊழியமென்னும் அற்புதத்தை வாசித்துப்பார். விசுவாசம் வழி கண்டுபிடித்து

ஜெயம் பெருகிறது. விசுவாசத்திற்கு அள வற்ற யூகமும் சகிப்புமுண்டு.

நான்கு சினேகிதர்கள் ஒரு மனப்பட்டு தங் களுடைய சினேகிதனை இயேசு குணமாக்க முடி யுமென்று அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அந்த நான்கு மனிதர்களும் வெளித் தோற்றங் களினால் அதைரியப்பட மாட்டோமென்று விசு வாசத்தினாலே தீர்மானஞ் செய்துகொண்டார் கள். சொஸ்தமடைய வாஞ்சித்த ஒருவனை இரட்சகரிடம் கொண்டு வருகிறதற்காகவேண்டி அந்த நான்கு மனிதர்களும் தங்களுடைய சித்தம், விசுவாசம், உடல்வலிமை யாவற்றையும் ஒன்ருக்கி உபயோகப்படுத்தினர்கள். தேவனு டைய ரணசிகிச்சைப் படைகளின் செஞ்சிலுவை மனிதர்கள் எங்கே?

ஊழியத்தைப்பற்றிய உவமை,

லூக்கா 10 : 27—37.

ஜன சமூக ஊழியத்திற்கு மிகவும் உத் தம இலக்ஷியம் நல்ல சமாரியனுடைய சரித்திரத் தில் அடங்கியிருக்கிறது. அந்தச் சரித்திரத் தைச் சந்தர்ப்பத்தோடு பொருத்தி வாசிக்க வேண்டும். உதவியைப் பெரிதும் நாடி நின்ற ஒரு மனிதனைக் கண்ட அளவிலே அந்த நல்ல சமாரியன் தனக்கிருந்த சகல திறமைகளையும் செயல்களையும் உபயோகித்தான். முதலாவது அவனைக் கண்டு மன துருகினன். அவனுடைய இருதயத்தில் ஏற்பட்ட இந்த இயக்கந்தான்

பின்பு அவன் செய்த காரியங்களுக்கெல்லாம் அடிஸ்தானமாயிருந்தது. அநேகர் தங்களுடைய இருதயத்தில் எவ்வித அசைவுமில்லாமல் வேதனை, துன்பம், தேவை யாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்க முடியும். தன்னுடைய காரியார்த்தமாகப் போய்க்கொண்டிருந்த சமாரி யனுடைய பிரயாணத்தைத் தடை செய்து நிறுத் தினது அவனுடைய இருதயத்தின் அனுதாப மே. அவன் ஒரு வைத்தியன் என்று நினைக்கி றீர்களா? அவன் ஒரு வைத்தியனயிருந்தால் தன் முன்னே கிடந்த அந்த பிணியாளியி னிடமிருந்து எவ்வித ஆதாயத்தையும் அவன் பெறமுடியாது. இந்தச் சமாரியன் முதல் உதவி சிகிச்சை முறைகளை நன்ருய் அறிந்திருந்தான். எதிர்பாராத விதமாய் ஏற்படுகிற விபத்துக் களுக்கு உதவியாயிருக்கும்பொருட்டுத் தன் னேடு தைலங்களையும் புண்ணைக்கட்டத் துணி களையுங் கொண்டுபோனன் என்று தோன்று கிறது. ஆனல் இரண சிகிச்சை அறிவைப் பற்றிய பெருமை அந்நாளில் அவனைத் தடுத்து நிறுத்தவில்லை. "இதோ பார், என் சாமர்த்தி யத்தை, நான் எவ்வளவு கெட்டிக்காரன் என்று உனக்குக் காட்டுகிறேன்" என்று சொல்லிக் கொண்டு அவன் வைத்தியஞ் செய்யப் புறப்பட வில்லை. இரக்கமொன்றே அவனை நிறுத்தினது. இதோ இந்த இடத்திலேதான் இருபெரும் கற்பனைகளுக்குமுள்ள முக்கியமான சம்பந்தம் காணப்படுகிறது. அவனுடைய உள்ளத்தில் குடிகொண்டிருந்த தேவ பக்தியிலிருந்து உற்பத் தியாகிப் பொங்கி யெழுந்த இரக்கமே அந்தச் சம்

பந்தம். அவன் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும், முழு சிந்தையோடும் அன்பு கூர்ந்தமையினாலே காயப்பட்டுக் கிடந்தவன் பாரம்பரியத்தின்படி தனக்குப் பகைவனாயிருந்தும் அவனுடைய உள்ளத்தில் பிறனிடத்தில் அன்பு கூரும் சிந்தை உண்டாயிற்று. மெய்ப் பக்தர் உள்ளத்திலே மெய்யான இரக்கம் ததும்பி நிற்கின்றது. அந்த இரக்கம் ஓயாமல் அன்பின் செயல்களாய் வெளிப்படுகின்றது.

இரக்கமற்ற பக்தி தனக்குத் தானே முரண்படுகின்றது.

இரக்கம் ஜீவியப் பிரயாணத்தில் அங்கங்கே தேவையாயிருப்பவர்களைக் கண்டு அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டாக நின்று நின்று போகும்படிச் செய்கிறது.

அந்த இரக்கமுள்ள இருதயந்தான் சிகிச்சை எப்படிப்பட்டதாயிருக்க வேண்டுமென்பதைத் தீர்மானஞ் செய்ததென்பதையுங் கவனியுங்கள்.

கடமைக்கென்று பரிசோதித்துச் சமீபத்திலுள்ள ஒரு வைத்தியசாலைக்குக் கொண்டு போய்க் காட்டி மருந்து வாங்கிக்கொள்ளும்படி அவன் சீட்டெழுதிக் கொடுக்கவில்லை, அவன்

செய்த வைத்தியத்திலே பரித்தியாக இலட்சணங் காணப்பட்டது. அவனுடைய இருதயம் இரக்கத்தினால் நிறைந்திருந்ததினாலே தன் கைக்கு அகப்பட்ட காரியத்தில் தன்முழு மனத்தையுஞ் செலுத்த அந்த ஏழை மனிதனுக்குத் தன் திறமையையும் அறிவையும் மிகவும் உத்தமமான முறையில் கையாடினான். அதன் முடிவு இது தானோ? இல்லை. அன்பு யாவற்றையும் முடிவுறச் செய்யும், இன்னும் அதிகமாய் அவனுக்கு உதவி செய்யக்கூடுமானால் அவன் அதையுஞ் செய்வான். தன்னை அறியாமலே அவன் தன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும், முழுச் சிந்தையோடும் பிறனிடத்தில் அன்பு கூர்ந்தான்; தனக்கென்று ஒன்றையும் வைத்துக் கொள்ளவில்லை. “அன்பு உடையார் என்பும் உரியர் பிறர்க்கு.” அன்பு இப்படியே செய்யும்.

இதற்குப்பின் அவன் தன் திண்ணிய கரங்களை உபயோகித்து அம் மனிதனைத் தூக்கித் தன் சொந்தக் கழுதையின்மேல் வைத்தான். பின்பு ஒன்றிரண்டு மைல் நோயாளியைச் சேணத்தின் மேல்வைத்துத் தாங்கினபடியே சத்திரஞ் சேருமட்டும் கஷ்டத்தோடு அவன் நடந்து செல்லவேண்டியதாயிற்று. இதோடு போகிற வழியில் எதிர்பட்ட மனிதர்கள் இந்த வினோதமான காட்சியைக் கண்டு தங்கள் வாயில் வந்தபடியெல்லாம் அபிப்பிராயங்களை அவன் காதுகேட்கச் சொல்லியிருப்பதையும் நினைத்துக் கொள்ளுங்கள். “என்ன இது! ஒரு சமாரியன்

ஒரு யூதனைக் கொண்டு போகிறானே" என்றிவை போன்ற சொற்கள் அவன் செவிகளில் விழுந்திருக்கும். என்றாலும் இவை யனைத்தையும் அன்பு தாங்க ஆயத்தமாயிருந்தது.

இந்தச் சமாரியன் பிணியாளியைச் சத்திரக்காரனிடம் (அச் சத்திரக்காரன் யூதனாயிருக்கலாம்) ஒப்புவித்தவுடன் "அப்பா! என் கடமை தீர்ந்தது" என்று பெருமூச்செறிந்து அந்த நாளில்தான் ஏதோ நல்ல காரியத்தைச் செய்து விட்டதாகத் தனக்குள்ளே மெச்சிக்கொண்டு போயிருப்பான் என்று ஒருவேளை சிலர் நினைக்கலாம். அப்படியில்லை. அன்பு யாவற்றையும் முற்ற முடியச்செய்யும். ஆகையால் அவன் அந்த மனிதன் முற்றிலும் குணமடைகிறதைப் பார்க்கத் தீர்மானிக்கிறான். அவன் சத்திரக்காரனைப் பார்த்து, "நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால் நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன்" என்றான்.

இதுதான் அன்பு! அது இருதயத்திலே தொடங்கி மனுஷப் பிருகிருதி முழுவதையுந் தழுவி மனுஷனுடைய சித்தத்தையும், மனத்தையும், முழுபலத்தையும் ஏவி எழுப்பிக் கிரியை செய்யத் தூண்டுவதோடுகூட அவனுடைய பணப்பையையும் அவிழ்த்து விடுகிறது.

இந்தக் கதையின் வரலாற்றை வாசிக்கும் பொழுது இலை மறைவு காய் மறைவாய் முதற்

கற்பனையை நிறைவேற்றுதல் என்பதின் பொருள் விளங்குகிறது.

"மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்" என்ற சத்தியம் இந்தப் பொன்னான உவமையில் வெகு தெளிவாயும் அழகாயும் பார்க்கலாம்.

ஆனால் கிறிஸ்துவில் தேவன் உன் பக்தியைத் தம் வசமாக்கிக் கொள்ளாவிட்டால் இவையாவும் கூடாத காரியமே.

இவை யாவற்றிற்கும் உட்கருத்து :

மத். *25: 34-40; 10: 42;*
2 கொரி. *5: 15;* சங். *116: 16;*
I யோவான் *4: 19-21.*

உன்னுடைய ஊழியத்தின் மதிப்பு உனக்குள்ள இராஜபக்தியின் அளவிற்கு ஒத்தது. சீஷர்கள் தங்களுடைய ஆண்டவருக்கு முன்பாக வெள்ளைக்கல் பரணியை மதிப்பிட்டு முற்றிலுந் தவறிவிட்டார்கள், (மத். 26: 6-13). மிகப் பெரிய துரோகமும் முழு அபஜெயமுமுள்ள இந்த அதிகாரத்தின் மத்தியில் பரிமள தைலத்தை ஊற்றின சம்பவம் ஆண்டவர் பேரிலுள்ள விசுவாசத்தையும் தாழ்மையான பக்தியையும் காட்டுகிற விசேஷித்த மனக்கவர்ச்சியான ஒரு காரியமாய் விளங்குகிறது.

“வீண் சிலவு” என்று அவர்கள் சொன்னார்கள்; அவர் அதை “நற்கிரியை” என்றார்; கண்டவுடனே நற்கிரியை எது என்று அறியவல்லவர் அவரே.

ஜனசமூக ஊழியம் ஆத்தும தத்துவத்தை உற்பத்தி ஸ்தானமாகக் கொண்டது. ஆகையால் அதின் இலட்சணமே ஆத்துமிகமாயிருக்கிறது. அவருக்காக முழு ஆத்துமாவோடு கூடப் பிறரிடத்தில் அன்பு கூறுதலே ஜன சமூக ஊழியமாம்.

முதலில் உன்னிடத்தில் அவர் பாராட்டின அன்பிலிருந்து நீ செய்கின்ற ஊழியம் உதித்தெழுந்ததா? இதை உள்ளத்தில் ஆழ்ந்து ஆராய்ந்து பார்; இல்லாவிட்டால் கண்டறிவது எளிதன்று, நீ செய்கிற ஊழியம் அவருக்கென்று செய்யப்படுகிறதா? நீ செய்கின்ற ஊழியம் இவ்விதக் கருத்தோடு ஆத்துமிக இயல்புடையதாயிராவிட்டால் ஒன்றில் அது தன்னலம் முழுத்தது; இன்றேல் அது அடிமைத் தனத்திற் பிறந்தது.

எப்படியாயினும் மற்றவர்களுக்குச் செய்த ஊழியம் தமக்கே செய்யப்பட்டதென்று தங்களுடைய அரசன் சொன்னபொழுது சீஷர்களுக்கு உண்டான ஆச்சரியத்தைக் கவனி. உன்னுடைய உணர்ச்சிகளை அதிகமாய் ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்ப்பதில் பயனில்லை. நீ அவரிடத்தில் பாராட்டுகிற அன்பைப் பார்க்கிலும் அவர் உன்னிடத்தில் பாராட்டுகிற அன்பைப்பற்றிய மெய் அறிவோடிருப்பதே உத்தமமானது.

ஆனால் ஒருபொழுதும் நீ இலட்சியத்தைப் பார்க்கத் தவறலாகாது. நீ கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லுகிற ஒவ்வொரு தருணத்திலும் பரிபூரணமான ஊழியமே உன் ஜீவிய இலட்சியமாயிருக்கிறதென்று ஒத்துக்கொண்டு, பரத்திலிருக்கிற தேவ தூதர்களுடைய இலட்சணங்களாகிய வைராக்கியம், ஊக்கம், உற்சாகம், பரித்தியாகம், பக்தி, விவேகம் என்பவைகளுடையவனாய் இவ்வுலகத்திலே அவருடைய சித்தம் நிறைவேறுகிற காலத்தை துரிதப்படுத்த நாடுகிறாய்.

மிகவும் அவசியமான அபிஷேகம் :

அப். 10: 38; 2 இரா. 2: 9, 10.

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மகா அவசியமானது. பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையில்லாமல் வேலை செய்தல் காலத்தை வீணாக்குதலே. ஒருவன் ஆவியில் நிறைந்திருப்பதற்கேற்பத் தன் ஊழியத்தில் பயன்படுகிறான். காரிய சித்திபெறத் தகுந்த விதத்தில் ஊழியஞ் செய்வதற்கு ஆணித் தழும்புகளுடைய அற்புத மூர்த்தியின் கரங்களால் மகா வல்லமையான அபிஷேகம் பெறவேண்டும்.

இயேசு கிறிஸ்துவின் ஜீவியத்தில் ஜெபத்திற்கும் ஊழிய வல்லமைக்குமுள்ள சங்கிலித் தொடர்பு வெகு தெளிவாயிருக்கிறது. உதாரணமாக மாற்கு 1: 35; லூக்கா 5: 16, 17; 6: 12, 19 முதலியன.

உபத்திரவங்கள்

சீஷனுக்குரிய விருது :

மத். 10: 25	லூக்கா 21: 12, 16, 17
யோவான் 15: 18-21	மாற்கு 10: 29, 30
1 யோவான் 3: 1	யோவான் 16: 33a
1 யோவான் 3: 12, 13	யோவான் 16: 2
மத். 10: 34-38	அப். 14: 22
லூக்கா 12: 4[illegible], 51-53	லூக்கா 9: 23

லூக்கா 14: 27

இயேசு கிறிஸ்துவினுடைய உண்மையான ஒவ்வொரு ஊழியக்காரனின் ஜீவியத்திலும் அவன் பங்காக ஏதோ ஒரு வகையில் அவனுக்கு உபத்திரவமுண்டு. ஏனென்றால் தன் எஜமானைப் புறக்கணித்துத் தள்ளின உலகத்தின் கைகளிலிருந்து கிடைக்கிற கடினமான நடத்துதலுக்கு அவன் தப்பிக்கொள்ள முடியாது.

இயேசு கிறிஸ்து வெறும் வீரனாக மட்டும் இவ்வுலகத்தில் தோன்றவில்லை. அப்படித் தோன்றியிருந்திருப்பாரானால் அவரை இவ்வுலகம் அங்கீகரித்திருக்கும். அவர் உலகத்தில் செல்வாக்குடையவராயிருந்திருப்பார். ஆனால் அவரோ செல்வாக்குடையவராயிருக்கவில்லை; இன்றும் அப்படியே இருக்கிறார். ஏனென்றால் மனிதர்களுடைய இருதயங்கள் தமக்கு அடங்க வேண்டுமென்று அவர் விரும்புகிறதோடு கூடத்

தம்முடைய சித்தத்துக்கு ஒத்தபடியே இயங்க வேண்டுமென்றும் அதிகாரத்தோடு கேட்கிறார்.

மனிதனுக்குள்ளேயிருக்கிற வீரத்துவம் என்னும் இலட்சணத்தோடு அவர் வழக்காடிக் கேட்கிறார். கரிபால்டி என்ற இத்தாலியத் தலைவன் தன்னுடைய கொடியின்கீழ் மனிதர்களைச் சேர்த்தபொழுது "உங்களுக்கு நல்ல நாட்கள்" என்று வாக்களித்து அவர்களை இழுக்கவில்லை. அவன் தன் கொடியின்கீழ் நின்று போராட வந்தவர்கள் யாவரிடத்திலும் நேரிலேதானே "பசி, தாகம், கண்டிப்பான யுத்தப் பிரயாணம், யுத்தம், மரணம் யாவும் என்னைப் பின்பற்றி வருகிறவர்களுக்குண்டு" என்று சொன்னான்.

இயேசு கிறிஸ்து சீஷர்களைச் சம்பாதிக்கிறதற்காகத் தம்முடைய தழும்புகளை மறைக்கவில்லை. அவர் அடிக்கடி தம்முடைய சீஷர்களாகும்படி வந்தவர்களை நிந்தைக்கும், அவதூறுக்கும், பரிகாசத்திற்கும், பகைக்கும் விரோதத்துக்கும், உபத்திரவத்துக்கும், மரணத்துக்கும் ஆயத்தமாயிருக்கும்படி முன்னதாகவே எச்சரித்தார். அவர் தாமே வழியில் முன்னே வழிகாட்டியாய்ச் சென்று சிலுவையையும் முள் முடியையும் பெற்றுக்கொண்டார்.

சிலுவையானது இரண்டு மரத்துண்டுகளினால் ஆனது. ஒன்று நெடுக்காயும் மற்றொன்று குறுக்காயும் அமைந்தது. குறுக்கா

யிருப்பது, எது தகுந்தது என்று இவ்வுலகம் நினைக்கிற நினைப்பின் எல்லைகளைச் சுட்டுகிறது. ஆனால் நெடுக்காயிருக்கிற மரத்துண்டோ உலகத்தின் நினைப்பை வெட்டிப் பிளந்து, ஊடுருவிப் பாய்ந்து, நேர் கோணமாய் வகுத்து, வானத்தைச் சுட்டி, உலக அபிப்பிராயங்களை எதிர்த்துப் பகைத்து, அதன்மேல் ஜெயங் கொள்ளுகிறது. இவ்விதமான ஜெயத்திற்கு ஏற்பட்ட முடிவு சிலுவை.

சிலுவையிலுள்ள துண்டு மரங்கள் இரண்டும் பாவத்தையும் உலக ஆவியையும் எதிர்த்து நின்று போராடுகிற தேவ அன்புக்கு அடையாளமாக எப்போதுமிருக்கட்டும்.

ஆதி தொடங்கி அவருடைய ஊழியக்காரர்கள் எப்படி நடத்தப்பட்டார்கள் ?

எலியா—1 இராஜா. 19: 1-2.
மிகாயா—1 இராஜா. 22: 27.
சகரியா—2 நாளா. 24: 20, 21.
எரேமியா—எரே. 26: 11-14; 37: 15, 16; 38: 4-6.
அனனியா—தானி. 3: 19-23.
தானியேல்—தானி. 6: 16.
யோவான் ஸ்நானகன்—மாற்கு 6: 17.
அப்போஸ்தலர்—அப். 5: 18, 40.
ஸ்தேவான்—அப். 7: 57-59.

யாக்கோபு—அப். 12: 2.

பேதுரு—அப். 12: 3, 4.

யோவான்—வெளி. 1: 9.

ஆயிரக்கணக்கான இரத்த சாட்சிகள்—எபி. 11: 35-38.

பவுல் :—

தமஸ்குவில், எருசலேமில் — ஜீவனைக் கொல்லச் சூழ்ச்சி. அப். 9: 23, 24, 29.

அந்தியோகியாவில், இக்கோனியத்தில், லீஸ்திராவில் — துன்பப்படுத்தி துரத்தி விட்டார்கள். அப். 13: 50; 14: 5, 19

பிலிப்பியில்-அடியும், காவலும். அப். 16: 19-24.
தெசலோனிக்கேயில்-அமளி. அப். 17: 5.
அத்தேனேயில்-பரியாசம். அப். 17: 18, 32.
கொரிந்துவில்-விரோதம். அப். 18: 6, 12.
எபேசுவில், எருசலேமில் — கலகம். அப். 19: 23, 29; 21: 27, 31.

பட்டணந்தோறும் உபத்திரவம். அப். 20: 22, 23. அப். 9: 16; 2 கொரி. 11: 23-28; 1 கொரி. 4: 9-13; 2 கொரி. 4: 8-11; ரோ. 8: 36; 1 கொரி. 15: 30, 31; 1 தெச. 2: 2, 14, 15; 3: 2, 4; 2 தீமோ. 1: 8, 12; 2: 3, 9; 3: 10-12; 4: 5.

கிறிஸ்துவுக்காக யுத்தம் செய்வதில் கஷ்டமுண்டு. ஆனால் உற்சாகமுள்ள யுத்த வீரன் கஷ்டத்தைச் சிலாக்கியமென்று எண்ணுகிறானே யொழிய அதினால் மனமடிகிறதில்லை.

பதிலுக்குக் கிடைத்த பெரிய சிலாக்கியம் :

மத். 5: 10-12. *ரோ. 8: 18.*
2 கொரி. 4: 16, 17. *எபி. 11: 26, 27.*
வெளி. 2: 10.

பலத்த ஆறுதல் :

யோவான் 16: 33. *ஏசா. 41: 10, 13.*
அப். 18: 9, 10. *ஏசா. 43: 2.*
2 தீமோ. 4: 16-18. *ஏசா. 63: 9.*
உபா. 33: 26, 27. *சங். 27.*
சங். 46: 1.

பிஷப் ஹானிங்டனுக்கு மிகவும் விருப்பமான ஒரு சங்கீதம் 27-ம் சங்கீதம். அவர் கொல்லப்படுகிறதற்கு முந்தின நாளாகிய அக்டோபர் 28, 1885-ல் அவருடைய தினசரிக் குறிப்பு புஸ்தகத்தில் "நான் மனம் உடைந்து நொறுங்கிப் போயிருந்தேன். 27-ம் சங்கீதம் என்னைத் தேற்றினது" என்று எழுதியிருக்கிறார்.

அக்கினி மத்தியில் உன் மனப்பாங்கு :

லூக்கா 22: 50, 51 *1 பே. 4: 19*
லூக்கா 23: 34 *லூக்கா 21: 19*
மத். 5: 44, 45 *எபி. 12: 2*
ரோ. 12: 14 *யாக். 5: 10*
அப். 7: 60 *அப். 20: 24*
1 பே. 2: 19-23 *அப். 21: 13*
ரோ. 12: 17-21 *தானி. 3: 16-18*
1 தெச. 5: 15 *தானி. 6: 10*

யாத். 23: 4, 5; 2 இராஜா. 6: 22; 2 நாளா. 28: 15; நீதி. 25: 21.

தானியேலும் அவனுடைய மூன்று சிநேகிதரும் பவுல் அப்போஸ்தலனும், விசேஷமாக நமது ரட்சகரும் எந்தக் காரியத்தையும் அமைதலான ஆவியோடு சகிக்க ஆயத்தமாயிருத்தல் என்னும் இலக்ஷணத்தோடு விளங்கினார்கள். தேவனிடத்தில் கொண்டிருந்தசிறு பிள்ளையைப் போன்ற விசுவாசத்திற்கும், எல்லா கஷ்டங்களையுஞ் சகித்துக்கொண்டு தேவனிடத்தில் உண்மையாயிருப்பதற்குள்ள அஞ்சா தீரத்திற்கும் அறிகுறியான படபடப்பின்மையும் பரபரப்பின்மையும் அவர்களிடம் விளங்கின. பொய்யாச் சாட்டப்படும் குற்றத்திற்கும் நிந்தைக்கும் பதில் பேசாமலிருப்பதற்கு மனித எல்லை மீறிய சக்தி மிகவும் அவசியமானது.

சில கல்தேயர் (தானி. 3: 8) குற்றப்படுத்த எப்போது தருணம் வாய்க்குமென்று எங்கும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். கர்த்தராகிய இயேசு தம்மேல் குற்றம் சாட்டினவர்களை

பிலாத்துவின் நியாயஸ்தலத்திற்கு முன் வெகு எளிதில் கலங்கச் செய்திருக்கலாம். ஆனால் அவரோ அப்படிச் செய்வதைத் தவிர்த்தார். அவர் அப்படிச் செய்திருந்தாரேயானால் அவர் களுடைய இருதயங்களைத் தமது கிருபையினால் கொள்ளையாடியிருக்க முடியாது. பதிலுக்குப் பதில் செய்கிறதும் பழி வாங்குதலும் அவரை விட்டுத் தூரமாயிருந்தன. அவர் தம்முடைய சொந்த கனத்திற்காகச் சண்டை செய்யவே யில்லை. மாற்கு 14: 61; 15: 3, 5; ஏசாயா 53: 7; 2 தீமோத்தேயு 2: 24 - 26. அவருடைய மன நிலை எப்பொழுதும் நன்மை செய்தலையே நாடிற்று.

ஆண்டவர் பழிவாங்காமலிருந்ததுமன்றித் தம் சத்துருக்களுக்காக ஜெபித்து, அவர்களுக்கு நன்மை செய்யும் சமயத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தார்.

தம்முடைய சீஷர்கள் நெருப்பின் மத்தி யிலுங்கூடத் திடமாய் நின்று பொறுமையான சகிப்போடும் சோர்வடையாத நற்பிரியத் தோடும், மாயமற்ற சந்தோஷத்தோடும், தங்கள் பகைவர்களை எதிர்த்து நிற்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார். மத்தேயு 5: 11, 12; லூக்கா 6: 22, 23; அப்போஸ்தலர் 5: 41; 2 கொரிந்தியர் 12: 10; 1 தெசலோனிக்கேயர் 1: 6; 1 பேதுரு 1: 6-8; 4: 12, 16.

உபத்திரவங்கள் சம்பந்தமாக ஏற்படுகிற பெரிய வினாக்களைப்பற்றிப் பேச இப்பொழுது

சமயமில்லை. சில குறிப்புக்கள் மட்டும் போது மானது.

பாவத்தின் நேரான விளைவாகவோ அல்லது பாவத்தைக் காரணமாகக்கொண்ட முடி வாகவோ உபத்திரவங்கள் அனைத்துமிருக் கின்றன. சில உபத்திரவங்கள் ஜென்ம காரணத் தினால் உண்டாகின்றன. பெரும்பாலும் உபத் திரவங்களோ மற்றவர்கள் காரணமாக ஏற்படு கின்றவைகளே. கிறிஸ்துவின் பாடுகளும் உபத்திரவங்களுமெல்லாம் மற்றவர்களுக்காக ஏற்பட்டதேயாம். அவர் கெத்சமெனேயிலும் கல்வாரிச் சிலுவையிலும் அடைந்த உபத்திர வத்தையும் மிகவும் நுட்பமான மனவேதனை யையும் மகா தீவிரமான ஆத்தும வேதனை யையும் மனுஷர்கள் ஒரு பொழுதும் ஆழங் காணவேமுடியாது. அவர் தம்முடைய ஜீவி யத்தின் முக்கியமான செய்கைகளை நினைத்த அளவில் வேதனையினால் புழுங்கினார். மாற்கு 10: 32-34; லூக்கா 12: 50; யோவான் 12: 27, 28; மாற்கு 14: 34, 35 பார்க்கவும்.

சிலுவையில் மரித்தவருடைய பாடுகளுக்கு முன்பாக மனித சமூகத்தின் பாடுகள் யாவும் மங்கி மறைகின்றன. உபத்திரவங்களின் இரகசி யத்தைப் பூரணமாய் விவரிப்பது கூடாத காரியம். தேவன் தாமே நம்மோடு பாடுபட்டு நம்முடைய துன்பந் துயரங்களில் பங்குகொள்ள இவ்வுலகத் துக்கு வந்தமையினாலே தம்முடைய பிள்ளைகள் பரிபூரணத் தன்மையை அடைகிறதற்கு உபத்

திரவங்கள் மிகவும் அவசியமானதென்று தேவன் தீர்மானித்திருக்கிருர். உபத்திரவங்களே அனுபவிக்க நம்மை விட்டுவிட்டு அவர் தூரமாய் விலகி நிற்பதில்லே; அவரும் நம்முடைய பாரத்தைத் தாங்குகிறதற்காக நம்மோடு குனி கிருர். அவருடைய பங்கு நம்முடைய பங்கிலும் அதிகமாயிருக்கிறது. ஏசாயா 53: 9; சங்கீதம் 68: 19 பார்க்கவும்.

மனுஷ ஜாதிக்கு மிகப் பெரிய ஆறுதல் யாதெனின் தேவாதி தேவனும் நம்மோடுகூடத் துன்பங்களே அனுபவிக்கிருர் என்ற அறிவே யாம்.

இரண்டு முன் மாதிரியான உதாரணங்கள்: 1. யோசேப்பு.

ஆதி. 37 முதலியன.

தேவனுக்கு அவனுடைய ஜீவியத்தைப் பற்றி ஒரு விசேஷித்த நோக்கமிருந்தது. பதினேழு வயதுள்ளவனும் தன்னேப்பற்றி மிகவும் பெருமையாக நினேத்துக் கொண்டிருந்தவனுமாகிய ஒரு பையனுக்குப் பொறுப்பான பதவியும் உலகப் பிரகாரமான காரிய சித்தியும் கிடைப்பதாயிருந்தால் அவன் நாசமடையக் கேட்கவேண்டுமோ? அவனேக் கண்டிப்பாய்ப் பழக்குவது மிகவும் அவசியமாயிருந்தது. அவனேப் பழக்கத் தேவன் சித்தங்கொண்டார். அவனுக்குண்டான முதல் அதிர்ச்சி பாழுங் கிணற்றிலே கிடைத்தது. தன் சகோதரர்கள் தன்னேப் பகைத்தார்களென்றும், தான் இவ்வுலகத்தில் தன்னந் தனிமையாயிருந்தானென்றும் யோசேப்பு முதன் முதல் அறிந்தபொழுது அவன் உள்ளம் நடுங்கினது. போத்திபாருடைய வீட்டிலே யோசேப்பினுடைய நல்லொழுக்கத்தையெல்லாம் பொய்யாகத் தீய ஒழுக்கமாய் பேசினவரை எல்லாஞ் சரியாயிருந்தது. அவன் இரண்டு வருஷங்களுக்குக் குறையாமல் சிறைச்சாலேயிலே தான் ஒருபொழுதும் செய்திராத ஒரு பெரிய பாவப் பழியைச் சுமந்து கொண்டு வாழவேண்டியதாயிருந்தது. அவனுடைய பெருமைக்கு ஏற்பட்ட கடைசீ அடி அதுதான். அவன் அதைப் பொறுமையோடு மௌனமாய் ஜெயவீரனேப் போலச் சகித்தான். காரியங்களே விளக்கிக் காட்டுகிறதற்கும் தன் கட்சியை எடுத்துப் பேசுகிறதற்கும் வழியில்லாதபடி, பிறர் தன்னேக்குறித்துத் தப்பாய்த் எண்ணித் தாறுமாருய்ப் பேசுவது சகிக்க முடியாத துன்பமேயாம்.

தேவன் அந்த நாட்களில் அவனுக்குத் தன்னேப்பற்றி யிருந்ததாகிய மதிப்பான எண்ணங்களே நீக்கித் தன்னே மறந்து ஜீவிக்கக் கற்றுக் கொடுத்து, அவன் வழிகளேச் செம்மையாக்கி இராஜரீக நிலேமைக்கு அவனேப் பழக்கினுர்.

தேசத்தில் மிகச் சங்கடமான காலமேற்பட்டபொழுது அதைப் பரிகரிக்கவும் பஞ்சத்தினுல் வருந்தின திரளான ஜனங்களுக்கு ஆறுதல் அளிக்கவும் அவனே ஏற்ற மனிதனுயிருந்தான். ஏனென்ருல் அவன் தன் சொந்த

ஜீவியத்தில் தரித்திரத்தின் அகோரத்தை அனுபவித்திருந்தமையினாலே துன்பப்படுகிறவர்களிடத்தில் அனுதாபப்படக் கூடியவனாயிருந்தான். ஆதியாகமம் 45: 7.

தேவன் நமக்கு உபத்திரவங்கள் ஏற்பட இடங் கொடுப்பதினுடைய முக்கிய நோக்கம் யாதெனில், நமக்காகவும் நமக்கென்றும் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த இயேசு கிறிஸ்துவின் சாயலாக நம்மை மாற்றும் பொருட்டேயாம்.

பரிபூரணமான ஊழியம், பரிபூரண பரித்தியாகத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. உன்னை முழங்காலிலேயே நிற்க வைக்கிற பரீட்சைகளுக்காக நீ எப்பொழுதும் நன்றி பாராட்டு. முன்னேறிப் போகிற கிறிஸ்தவன் தன் ஜீவியத்தில் எங்கேயோ ஓரிடத்தில் அழுத்தப்படுதலை உணரவேண்டும், எபி. 12: 5-11. கோதுமை வயலின் பிரமாணம் ஆவிக்குரிய ஜீவியப்பிரமாணம். யோவான் 12: 24-26; பிலிப்பியர் 3: 10, 11; லூக்கா 24: 26; ரோமர் 8: 17; 2 தீமோத்தேயு 2: 12 பார்க்கவும்.

உபத்திரவங்களில்லாமல் ஜெயமில்லை; வேதனையில்லாமல் முன்னேற்றமில்லை; சிலுவையில்லாமல் கிரீடமில்லை.

வாழ்வின் உயர்வை லாபத்தால்
வளமாய் அளக்கத் துணியாதே;
தாழ்வில் ஜீவச் சிறப்பதனை
தாங்கிய நஷ்டம் அளந்திடுமே.

வாழ்வில் அருந்தும் கனிரசமும்
வாங்கி ஊற்றிய கனிரசமும்
பாழ்சேர் பிறவிப் பயன் தன்னைப்
பண்பாய் அமைக்கப் போதாதே.
அன்பின் வலிமை தனைத்தானே
அன்பாய் அளிக்க நிலைகொள்ளும்.
என்பை அழிக்கும் கஷ்டங்கள்
என்றும் உற்றவர் எந்நாளும்
அம்பொன் உலகின் உயிரானார்;
அரிய வள்ளல் எனத் திகழ்வார்.
அன்பே உடைய உத்தமர்கள்
என்பும் உடையார் பிறர் தமக்கே.

2. யோபு.

யோபுடைய பாடுகளின் கருத்து மிகப் பெரிய இரகசியமாய்த்தானிருக்கிறது. அதினால் அவனுடைய விசுவாசம் ஏழுதரம் புடமிடப்பட்டுப் பொன்னாக விளங்கினது நிசந்தான். யோபு 23: 10 பார்க்கவும். ஆனால் இது தவிர அவன் துன்பங்களுக்கு வேறு நோக்கமுமிருந்தது.

யோபுடைய விசுவாசம் தன்னயத்தை பற்றியதாயிருந்தது என்று சாத்தான் அவன் மேல் குற்றஞ் சாட்டினான். யோபு 1: 8-22; 2: 3-6. "சகோதரர்களைப்பற்றிக் குற்றஞ் சாட்டுகிறவனை" தேவன் எப்படி வாயடைக்க முடியும்? யோபைப் புடைக்கச் சாத்தானுக்கு உத்தரவு கொடுத்தபோது, தேவன் தம்மோடு உறுதியாய் ஐக்கியப்பட்டிருக்கிற ஒரு மனிதன்

எவ்வளவு பாடுகளைத் தன் விசுவாசத்தை இழந்துபோகாமல் சகிக்கக்கூடும் என்பதை உலகத்தார் எல்லாருக்கும் விளக்கிக் காட்டும்படியான மேன்மையான சிலாக்கியத்தை அவனுக்கு அருளினார், யோபு 19: 25-27; யாக். 5: 11.

யோசேப்பினுடைய பாடுகளில் அவனைப் பழக்கவேண்டுமென்பதே தேவனுடைய நோக்கமாயிருந்தால் யோபு பாடுபட்டதில் தேவனுடைய நோக்கம் அவன் சாட்சியாய் இருக்கவேண்டுமென்பதே.

கேள்வி :—

யோவான் 4: 34-இல் சொல்லியிருக்கிற நம் ரட்சகரின் வார்த்தைகளை நீ எவ்வளவு தூரம் உன்னுடையதாக்கித் திரும்பிச் சொல்லலாம்?

முற்றிற்று.

BAPUJI PRESS, 187, MOUNT ROAD, MADRAS-2.

உங்களுக்கு அவசியமான சில நூல்கள்

முற்றும் ஒப்புக்கொடுத்தல்

விலை ரூ. 1-25

—ஜே. எட்வின் ஆர்

ஆத்தும வாஞ்சை

1·00

—ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித்

நான் விரும்பும் நாடு

1·00

—ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித்

வெற்றி

0·05

(தபால் செலவு தனி)

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்
158, புரசவாக்கம் ஹை ரோடு,
சென்னை-7

ELS

BOOKS THAT RADIATE LIGHT

THE SPIRIT'S SWORD

BY

R. T. ARCHIBALD

விலை: 75 ந. பை.